REGISTERED AS A CATHOLIC WEEKLY (P.197) Founded 19 Feb 1876

# பாதுகாவலன்

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு


PATHUKAVALAN

மலர் 125
இதழ் 17
01மார்கழி
2001
பக்கங்கள் 8
விலை ரூ. 5

## 12ஆவது பொதுத்தேர்தல் பற்றிய யாழ். ஆயரின் அறிக்கை

## எமது சுதந்திரமான எதிர்காலத்தை மனதில்கொண்டு

# எமது வாக்குகளை சரியான விதமாக பயன்படுத்துவோம்



பொதுத்தேர்தல் பற்றி யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையின் முழு விபரம் வருமாறு

இலங்கை தமிழ் மக்களாகிய நாம் மிகவும் முக்கியமான 12ஆவது பொதுத்தேர்தலை எதிர்நோக்கியுள்ளோம். நீண்டகாலப் போரும் அதன் தாக்கங்களும் எந்தவித முடிவுமின்றி நீண்டு கொண்டேயிருக்கும் இவ் வேளையில் தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்துள்ள இத் தேர்தல் மிகவும் முக்கியமானது. தமிழ் மக்கள் எல்லோரும் ஒன்றிணைந்து தம் எண்ணங்களையும் செயற்பாடுகளையும் உறுதியாக்க வேண்டும் என்ற குரல் மிக நீண்டகாலமாக ஒலித்துக்கொண்டே வந்தது. இத்தடவை நடைபெற்றுள்ள இவ் ஒன்றிப்பு தமிழ் மக்களுக்கு நன்மை பயக்குமாயின் வரவேற்கத்தக்கதே.

கடந்த காலங்களில் தேர்தலில் வாக்களிக்க அக்கறையற்றவர்களாக ஏனோதானோ என்ற போக்கில் இருந்துவிட்ட நாம் இத்தடவை எமது பொன்னான வாக்குகளை சுதந்திரமாகவும் வற்புறுத்தலின்றியும் பயன்படுத்த வேண்டும். தேர்தலில் வாக்களிக்காதிருத்தல், சரியான மனத் தெளிவின்றி வாக்களித்தல், முறையற்ற வாக்களித்தலில் பங்குகொள்ள முற்படல் என்பன எல்லாம் ஜனநாயக தேர்தல் வழிமுறைகளுக்கு முரணானவை என்பது நாம் எல்லோரும் அறிந்ததே. தமிழ் மக்களின் சுபீட்சமான சுதந்திரமான எதிர்காலத்தை மனதில் கொண்டு தெளிந்த மனதோடும் எமது வாக்குகளை வீணாக்காமல் சரியான விதமாக பயன்படுத்துவோம். தேர்தல் ஆள் மாறாட்டங்களையும் வன்முறைகளையும் தவிர்த்து நீதியான உண்மையான ஜனநாயகத் தேர்தல் ஒன்று நடைபெற நாம் வழிவகுப்போம்.

வன்முறைகளற்ற நீதியான ஜனநாயக தேர்தல் ஒன்று நடைபெறவும் அதன்வழி தமிழ் மக்களின் நீண்டகால துன்ப, துயரங்கள் நீங்கி நீதியோடு கூடிய நிம்மதியான சுதந்திர வாழ்வு கிடைக்க இறைவனை வேண்டுகின்றோம்.

### புதிய தியாக்கோன்மார்

அருள்சகோதரர்கள் மகன் அலோசியஸ், எஸ்.ஜே.சி. பாஸ்கரன், எம். பத்திநாதர் ஆகிய மூவரும் 29.11.2001 அன்று யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் தியாக்கோன்களாக அபிஷேகம் செய்யப்பட்டனர்.

### உயிர்ப்பூட்டல் கருத்தரங்கு

யாழ். மனித முன்னேற்ற நடுநிலையத்தினால் வடமராட்சியில் பல்வேறு இட்ங்களில் உயிர்ப்பூட்டல் குழுக்கள் இயக்கப்பட்டு வருகின்றது. இக் குழுக்களுக்கு இடையிலான கருத்தரங்கு ஒன்று கடந்த 24–11–2001 அன்று பொலிகண்டி குழந்தை யேசு ஆலயத்தில் நடைபெற்றது. சிறு தியானத்துடன் ஆரம்பமான இக்கருத்தரங்குக்கு வெவ்வேறு குழுக்களிலிருந்து 40 பேர் பங்கு பற்றினர். இக்கருத்தரங்கில் உள ஆற்றுப்படுத்தல், விளையாட்டுக்கள், உரைகள், நாடகங்கள் என்பன உள்ளடக்கப்பட்டிருந்தன. ''இளைஞர்களும் இன்றைய சூழலும்'' என்னும் தலைப்பில் ஊக்குவிப்பாளர் ம. பிரான்சிஸ் ''சமாதானம் ஏன் அவசியம்'' என்று ஊக்குவிப்பாளர் அமில்ரன், ''உள ஆற்றுப்படுத்தலை'' ஊக்குவிப்பாளர் N. கருணாகரன் அவர்களும் வழங்கினர். இக்கருத்தரங்கை முன்னின்று நடாத்திய பொலிகண்டி உயிர்ப்பூட்டல் குழுவினர் தங்கள் கிராமத்தைச் சுற்றிக் காண்பிக்க அனைவரையும் அழைத்துச் சென்றனர். பின்பு 6.00 மணியளவில் கருத்தரங்கு நிறைவுற்றது.

## தீவகப் பகுதி வன்முறையில் தாக்கப்பட்டோருக்கு அனுதாபங்கள்

### யாழ். மறைமாவட்ட நீதி, சமாதான ஆணைக்குழு

யாழ். மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு தீவகப் பகுதியில் நடந்த கொடூரச் செயலை கண்டித்து வெளியிட்ட அறிக்கை பின்வருமாறு

யாழ் தீவகப்பகுதியில் 28ம் திகதி தேர்தல் பிரச்சாரத்திற்காக சென்ற வேட்பாளர்கள் மீது நடாத்தப்பட்ட வன்முறைகளை நீதி சமாதான ஆணைக்குழு வன்மையாகக் கண்டிக்கிறது. தமிழ் மக்கள் சொல்லொண்ணாத் துன்பங்கள் அனுபவிக்கும் இவ்வேளையில் தேர்தல் காலங்களில் நடைபெறும் இச் சம்பவமானது மக்களின் சனநாயக உரிமைகளை பறித்தெடுக்கும் ஒரு முயற்சியாகவே நாம் இதனைக் கருதுகிறோம். சுதந்திரமாக மக்கள் தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் உரிமைகளை அனைத்து கட்சிகளுக்கும் மதித்து நடக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம்.

கத்தோலிக்க ஆயர் சங்கம் வலியுறுத்தியதையே நாமும் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம். அதாவது ''வன்முறையற்ற ஒரு சூழலில் தேர்தல் நடாத்தப்படவேண்டும் என்று சனநாயக முறையில் நம்பிக்கையுள்ள எல்லோரும் விரும்புகின்றனர்.'' எனவே அனைத்து கட்சிகளும் இவ்வாறான ஒரு சுதந்திர சூழலுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டுகின்றோம்.

இவ்வேளையில் காயப்பட்டோருக்கும் சிறப்பாக கொலையுண்டவரின் குடும்பத்திற்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கின்றோம்.

### திருவழிபாட்டு நாட்காட்டி — 2002

திருவழிபாட்டு நிலையத்தினரால் தயாரித்து வெளியிடப்படும் திருவழிபாட்டு நாட்காட்டி மிக விரைவில் விற்பனைக்கு வரவுள்ளது.

ஒரு நாட்காட்டியின் விலை 60ரூபா மட்டுமே. பெற்றுக்கொள்ள விரும்புவோர் நேரகாலத்தோடு பங்குத்தந்தையரோடு தொடர்புகொள்ளவும். திருவழிபாட்டு நிலையத்திலும் இவற்றை பெற்றுக்கொள்ளலாம்.

## நீதியையும் சமாதானத்தையும் பாதுகாப்போம்

### கொழும்பு மறைமாவட்ட நீதி, சமாதான ஆணைக்குழு

பாராளுமன்றம் கலைக்கப்பட்டு சிறிது காலத்தின் பின் நாட்டில் ஏற்பட்ட வன்முறைகள், தேர்தல் சட்டதிட்டங்கள் முறியடிக்கப்பட்டமை, மானிட உரிமைகள் அழிக்கப்பட்டதையிட்டு எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக்கொள்கின்றோம். எதிர்வரும் தேர்தல் காலத்தில் தேர்தல் சட்டதிட்டங்களைக் கவனத்திற்கொண்டு, நீதியான சுயேட்சையான தேர்தலை நடாத்த கடமையாற்றும் படியும், எந்த மனிதனுக்கும், பொது உடமைகளுக்கும், எவ்விதத்திலும் தீமை விளைவிக்காதபடியும், இடையூறு ஏற்படாமல் இருக்கும் படி வகைபார்த்துக் கொள்ளும் படியும் நீதியையும், சமாதானத்தையும் பாதுகாக்கும் படியும் தேர்தலுக்காகப் போட்டியிடும் எல்லாக் கட்சித் தலைவர்களையும் மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

## அதிகாரம் கூடிய பிக்குமார் தான் சண்டைக்கு ஊக்கம் கொடுக்கிறார்கள்

அதிகாரம் கூடிய பிக்குமார் தான் சண்டைக்கு ஊக்கம் கொடுக்கின்றார்கள். பிரச்சார ஊடகங்களும் அவர்கள் சொல்வதைத்தான் பரப்புகிறது. ஆனால் 30 ஆயிரம் பிக்குகளில் 25 ஆயிரம் பேர் தமிழ் மக்களோடு இணைந்து வாழத் தயாராக உள்ளதோடு மட்டுமன்றி அதிகாரமுடைய பிக்குமாரின் இனவாத செயற்பாட்டுக்கு எதிராக கேள்வியும் கேட்கின்றார்கள், சில சிங்கள மக்கள் கூட அதிகாரமுடைய இனவாத பிக்குகள் வெளியேற்றப்பட வேண்டும் என்ற கருத்துடையவர்களாக உள்ளனர்.

இலங்கையில் நீதிக்கும் சமாதானத்துக்குமான உலக ஒத்துழைப்பு மன்ற பிரதிநிதி மகாகல்கடவல்ல புண்ணிய சார தேரர் அவர்கள் ''கியூடெக்'' நிறுவன இயக்குனர் ஜெயக்குமார் அடிகளாரின் தலைமையில் புனித சின்னப்பர் விடுதியில் நடாத்தப்பட்ட கருத்தரங்கில் உரையாற்றும்போது இதனை தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில், தெற்கிலுள்ள சகல பிரச்சார ஊடகங்களும் சண்டை பற்றிய செய்திகளுக்கே முன்னுரிமை கொடுத்து பிரசுரிக்கின்றன

# வன்முறைகளை கண்டிக்கிறோம்

### யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க குருக்கள் ஒன்றியம்

எமது பிரதேசத்தில் தற்போது நடைபெறவிருக்கும் தேர்தல் தமிழ் மக்களாகிய எமது அமைதியான எதிர்காலம் மட்டில் முக்கியமானதொன்றாகவே கருதப்படுகின்றது.

அதேவேளை ஜனநாயக தேர்தலென்பது மக்கள் தேர்தலில் போட்டியிடும் ஒவ்வொரு கட்சிகளினதும் வேட்பாளர்களினதும் தேர்தல் விஞ்ஞாபனங்களை சுதந்திரமாக அறிந்து தாம் விரும்பும் கட்சிக்கோ அல்லது வேட்பாளருக்கோ எவ்வித பலவந்தமுமின்றி வாக்களித்து தமது பிரதிநிதிகளை தெரிவு செய்வதாகும். ஏனவே கட்சிகளின் வேட்பாளர்கள் தமது கொள்கைகளை மக்களுக்கு விளக்குவதையும் மக்கள் அவற்றுக்கு சுதந்திரமாக செவிமடுப்பதையும் தடுக்கும் செயலானது ஜனநாயகத்துக்கு எதிரான மாபெரும் குற்றமாகும்.

இந்த வகையில் கடந்த சில தினங்களில் எமது பிரதேசத்தில் நடைபெற்ற சில வன்முறைச் சம்பவங்கள் ஒரு சுதந்திர ஜனநாயக தேர்தலுக்கு இழுக்கை ஏற்படுத்தும் நிகழ்வுகளாக இருப்பதால் அதற்குக் காரணமானவர்களை யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க குருக்கள் ஒன்றியம் வன்மையாகக் கணடிக்கின்றது. இதனால் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தனது ஆழ்ந்த அனுதாபத்தையும் காயமடைந்தவாகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு தனது ஆதரவையும் தெரிவிக்கின்றது.

அத்துடன் தேர்தலில் பங்கு

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

### ஆண்டு ஒன்று ஞாயிறு வாசக புத்தகம்

3.12.2001இல் ஆரம்பாகியுள்ள திருவருகைக் கால ஆண்டு ஒன்றுக்கான ஞாயிறு வாசகங்கள் புத்தக வடிவில் வெளிவந்துள்ளன. ஒரு புத்தகத்தின் விலை 300 ரூபா மட்டுமே.

தங்களுக்கு தேவையான பிரதிகளின் தொகையை முன்கூட்டியே முற்பணத்துடன் அறியத்தருமாறு திருவழிபாட்டு நிலைய இயக்குனர் ப.யோ. ஜெபரட்ணம் அடிகள் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் கருத்து

## இது தமிழ் மக்களின் தேர்தல்

டிசம்பர் 5ஆம் திகதி 2001 அன்று நடைபெறவிருக்கும் 12வது பாராளுமன்ற பொதுத் தேர்தல் இலங்கை தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் மிகவும் முக்கியம் வாய்ந்ததாகவே அரசியல் அவதானிகளால் கருதப்படுகின்றது.

தமிழ் மக்களின் நீண்ட காலப் பிரச்சினையை பேரம் பேசி அரசியல் வாக்குகளை பெற்று அதன்வழி தமிழ் மக்களையே இரண்டாம் தரப் பிரஜைகளாக்கும் யுக்தியை இலங்கையின் பெரும்பான்மை கட்சிகள் இரண்டும் மாறி மாறி செய்து வந்துள்ளமை மறைக்கப்படமுடியாத உண்மையாகும்.

தமிழர்கள் தமக்குள்ளே கட்சிப் பிளவுகளை ஏற்படுத்தி தம்மைப் பலவீனப்படுத்திக் கொள்ளாமல் ஒன்றுபட வேண்டும் என்ற குரல் மிக நீண்டகாலமாக பல மத, அரசியல் தலைவர்களால் வெளியிடப்பட்டுக் கொண்டே வந்தது. ஆனால் அது ஒருபோதும் முற்றுமுழுதாக சாத்தியப்படாத ஒன்றாகவே இருந்து வந்துள்ளது.

இத் தடவை தமிழ் கட்சிகள் ஓரளவென்றாலும் தமக்குள் ஒற்றுமையை ஏற்படுத்தியுள்ளமை வரவேற்கத்தக்க ஒன்றே.

இலங்கை அரசியலில் எந்த மாற்றம் ஏற்பட்டாலும் அது தமிழ் மக்களையும் அவர்களது பிரச்சினையையும் பேரம் பேசி பெற்றுக் கொண்ட ஒரு மாற்றமாகவே இருக்கும். அந்த மாற்றம் எந்த வகையிலும் தமிழ் மக்களுக்கு நீதியோடு கூடிய நிரந்தர அமைதியை தரப்போவதில்லை என்பது நாம் அனைவரும் பட்டறிந்த உண்மையாகும்.

எது எப்படியிருப்பினும் நடைபெறப்போகின்ற பொதுத் தேர்தலை கடந்த சில காலங்களில் ஏனோ தானோ என்ற போக்கில் நோக்கியதைப் போன்று அணுகாமல் இயன்றவரையில் நம்பிக்கையோடும் துணிவோடும் அணுகுவதே சிறந்தது. சுதந்திரத்தோடும் தெளிந்த மனதோடும் தமிழ் மக்களின் நீண்ட காலப் பிரச்சினைக்கான நிரந்தர தீர்வினை பெறத்தக்கவிதமாக எமது அரசியல் வாக்குகளை பயன்படுத்துவோம். அரசியல் வன் முறைகள், ஆள் மாறாட்டங்கள், முறையற்ற வாக்களிப்பில் பங்குகொள்ளுதல என்பவற்றையெல்லாம் தவிர்த்து வன்முறைகளற்ற நீதியான ஜனநாயக தேர்தல் நடைபெறவும் அதன்வழி தமிழ் மக்களின் நீண்டகால துன்ப துயரங்கள் நீங்கவும் வழிசெய்வோம்.

யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகையின் தேர்தல் பற்றிய அறிக்கை இதையே வலியுறுத்துகிறது.

அறிக்கை ''தேர்தலில் வாக்களிக்காதிருத்தல், சரியான மனத் தெளிவின்றி வாக்களித்தல், முறையற்ற வாக்களித்தலில் பங்குகொள்ள முற்படல் என்பன எல்லாம் ஜனநாயக தேர்தல் வழி முறைகளுக்கு முரணானவை என்பது நாம் எல்லோரும் அறிந்ததே. தமிழ் மக்களின் சுபீட்சமான சுதந்திரமான எதிர்காலத்தை மனதில் கொண்டு தெளிந்த மனதோடும் எமது வாக்குகளை வீணாக்காமல் சரியானவிதமாக பயன்படுத்துவோம்'' எனத் தெரிவிக்கிறது.

தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து நமது பிரதிநிதித்துவத்தை வெளிக்கொணர்வோம். இது தமிழ் மக்கள் தேர்தல்

# யேசுவின் வருகைக்கு ஆயத்தம்

யேசுவின் வருகைக்கு ஆயத்தம் செய்கின்ற இந்த அற்புதமான காலத்திலே இறைவன் நம் ஒவ்வொருவரையும் தம் ஊழியன் திருமுழுக்கு அருளப்பர் வழியாக சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறார். திருவருகைக் காலம் அருள் பொழியும் காலம், அற்புதங்கள் நிறைந்த காலம், மனமாற்றம் கைகூடுகிற காலம்

**மனமாற்றம்** மாற்றம் என்பது இயற்கையின் நியதி. மனித வாழ்வுக்கு மாற்றம் இயல்பானது. மனித வளர்ச்சிக்கு இது இன்றியமையாதது. தனி மனிதனுக்கு மட்டுமன்று சமூகங்கள் முன்னேற்றம் அடையமுடியும்.

மாற்றங்களுள் அடிப்படையானதும் ஆழமானதும் மனிதனின் மனமாற்றமே. மனம் மாறும் போதுதான் மனிதன் மாறுகின்றான். உள்ளங்கள் மாறும்போது தான் உண்மையாகவே உள்ளங்கள் மாறுகின்றது. மனமாற்றத்தால் தான் மனிதர்கள் மாமனிதர்கள் ஆகிறார்கள். அதுபோல் மனித வரலாற்றின் மாபெரும் வளர்ச்சிக்கெல்லாம் தொடக்கமாய் அமைந்தது ஒருசில மகான்களின் மனமாற்றமே. சின்னப்பரின் மனமாற்றத்தால்த்தான் ஒரு தலைமுறைக் காலத்துக்குள்ளாகவே கிறிதவம் ஓர் உலக இயக்கமாக உருவெடுத்தது. இவ்வாறு ஒவ்வொரு வளர்ச்சிக்கும் மனமாற்றம் அவசியம்.

**திருப்புமுனை** கிறிஸ்து இவ்வுலகில் பிறப்பது உலக வரலாற்றிலேயே ஒரு முன்னேற்றத் திருப்பு முனையாக அமையப்போவது என்பது இறைவனின் திட்டம் அந்த முன்னேற்றத்தை அனுபவிக்க ஒவ்வொரு மனிதனும் அந்த யேசுவை ஏற்றுக் கொள்ளும் மனப் பக்குவம் அடைய வேண்டும். அதற்கு யூத சமூகத்தில் ஒவ்வொரு மனிதனின் மனமாற்றமும் அவசியமாக அமைந்தது. இதுவே திருமுழுக்கு அருளப்பரின் பணியாகவும் இருந்தது. அவர் மனமாற்றத்தின் அடையாளமாக திருமுழுக்கு வழங்கினார். அடிப்படையில் அது ஒரு ஆன்மீக மாற்றம். அதாவது மக்கள் இறைவனுடன் கொள்ளும் உறவில் ஏற்பட வேண்டிய மாற்றம் லூக்கா 3:9இல் காண்பது போல அவருடைய வருகை நல்லவர்களுக்கு வாழ்வாகவும் தீயவர்களுக்கு அழிவாகவும் அமையும். அவரது வருகைக்காக மக்கள் தங்களையே தயாரிக்க வேண்டும்.

*மூன்று வழிகள் :* இந்த ஆன்மீக மாற்றம் மூன்று வழிகளில் வெளிப்பட வேண்டும்.

i.) மத் 3:7–10இல் காண்பதுபோல ஏனோதானோ என்னும் உளப்போக்கிலிருந்தும், எல்லாம் நன்றாகத்தான் இருக்கிறது எனும் மெத்தனப் போக்கிலிருந்தும் எல்லாம் இப்படித்தான் இருக்கும் என்னும் ஆர்வமோ அவசரமோ அற்ற மந்த நிலையிலிருந்து மாற்றம்.

ii.) இது ஒரு வாழ்க்கை மாற்றம் லூாக்3:11–14இல் காண்பது போல் நீதி நெறியிலும் சகோதரப் பகிர்வு முறையுடனும் வாழ அழைக்கின்றார். ''இரண்டு அங்கி வைத்திருப்பவன், இல்லாதவனோடு பகிர்ந்து கொள்ளட்டும், உணவு உடையவனும் அவ்வாறே செய்யட்டும்......''

iii.) லூாக் 3:4–6இல் காண்பது போல் இது ஒரு சமூகமாற்றம் சமூகத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகளெல்லாம் நீங்கி வாழ அறைகூவல் கொடுக்கிறார்

**திருவருட்சாதனம்** ஆம், இன்றைய நாட்களில் இந்த அறைகூவல் நமக்குக் கொடுக்கப்படுகிறது. திருச்சபைத் தாயானவள் நாம் ஒவ்வொருவரும் உண்மையான மனமாற்றம் அடைய பாவமன்னிப்பு திருவருட்சாதனத்தைத் தந்துள்ளது. எனவே நாம் ஒவ்வொருவரும் ஆர்வத்தோடு இத் திருவருட்சாதனத்திலே பங்குகொண்டு மனமாற்றம் அடைவோம். நம்மைத் தேடி வரும் யேசுவை நம் வாழ்வில் சந்திப்போம்.

**செபம்** அன்பே உருவான இறைவா, உமது மீட்புத் திட்டத்தின் பலன்கள் எல்லாவற்றையும் அடையத் தூய உள்ளம் அவசியம் என்பதை நீர் வெளிப்படுத்தியுள்ளீரா? பாவ நிலையிலிருந்து மனம் மாற எந்த முயற்சியும் எடுக்க முடியாதவர்களாக இருக்கிறோமையா இதனால் எந்த முன்னேற்றமும் அடைய முடியாமல் வாழ்வே சலிப்படைந்து கஷ்டங்களும், துன்பங்களும் கவலைகளும் கடன் தொல்லைகளும் வாட்டுதையா. இந்தப் பாவ நிலையிலிருந்து விடுபட்டு ''பாவமன்னிப்பு'' திருவருட்சாதனம் பெற்று உமது அன்புக் குழந்தைகளாக மகிழ்வோடு வாழ வரம் தாருமையா. ஆமென்.

அருள்திரு அ.ம. ஸ்ரீபன் C.R.

# அமல உற்பவத்தின் உதரத்தில் உதித்த ஒளி

''அப்பொழுது கடவுள் ஒளி தோன்றுக என்றார். ஒளி தோன்றிற்று'' (தொ. நூல்1,3) அன்று இயற்கையை படைத்த கடவுள் இயற்கையின் முதற் படைப்பாக ஒளியை உண்டாக்கினார். ஆதிகால மனிதன் இயற்கைக் கற்களை பயன்படுத்தி செயற்கை ஒளியை கண்டு பிடித்தான் . விஞ்ஞானம் வளர்ந்து நிற்கும் இந்த மிலேனியத்தில் ஒளிப்பிளம்பு உண்டாக ஒலியுடன் கூடிய அதிர்வின் பின் உலகமே அழிவை நோக்கி நிற்பது கண்கூடு. ஆனால், இன்றைய சமுதாயத்தின் அத்தியவசிய தேவையும் ஒளி தான். மங்கள நிகழ்வுகளிற்கு ஒளியேற்றி நிற்பது தமிழர் பண்பாடு. மேல் நாட்டிலும் ஒளிக்கென பல முன் உரிமைகள் உண்டு. மனிதன் பிறக்கும் போதும் இறக்கும் போதும் ஒளி ஏற்றப்படுகிறது. வேதாகமத்திலும் பல இடங்களில் ஒளி ஒளிர்வதை ஒளி மிளிர்வதை வாசகங்களில் காணலாம்.

உலகை மீட்க்கும் மாபரன் அமல உற்பவ தாயின் உதரத்தில் மீட்பின் ஒளியாக உதிர்த்தார். ஒத்தமை நற்செய்தியில் இருந்து வேறுபட்ட கருத்தைத்தரும் நற்செய்தியாளரான புனித யோவான் தமது நற்செய்தியில் ''அவரிடம் வாழ்வு இருந்தது அவ் வாழ்வு மனிதரிற்கு ஒளியாய் இருந்தது அந்த ஒளி இருளில் ஒளிர்ந்தது. இருள் அதன் மேல் வெற்றி கொள்ளவில்லை'' (யோவான் 1:4–5) அனைத்து மனிதரையும் ஒளிர்விக்கும் உண்மையான ஒளி உலகிற்கு வந்து கொண்டிருந்தது. (யோவா 1:9) எனக்கூறினார். பாவ இருளில் மூழ்கி இருக்கும் உலக மாந்தரை மீட்க குழந்தை யேசு அமல உற்பவ அன்னை மூலம் உலகிற்கு ஒளியாக வந்தார் என்னும் உண்மைக்கு சான்று கூறுகிறார்

உலகை மீட்க தமது மகனை அனுப்ப திட்டமிட்டபோதே, யுவக்கீனுக்கும் அன்னம்மாவுக்கும் மகளாக தேவதாயைப் படைத்தார். சந்திரனைப் போல் ரூபவதியாய், சூரியனைப் போல் இலங்குகிறவளாய், படையணியைப் போல் பயங்கரம் உறுத்துகிறவளாய் அருணோதயம் போல் எழுந்து வருகிற இவள்யார்?

இவளே மாசில்லாமல் உற்பவித்த மரியாள் இத் தூய மரியாள் ''நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்'' என்று இறைசித்தத்திற்கு தன்னை முற்று முழுதாக ஒப்புக்கொடுத்து குழந்தை இயேசுவை உலகிற்கு அளித்தாள். பழைய ஏற்பாட்டில் ஆதிப் பெற்றோரை பாவத்தில் விழுத்திய பாம்பை இறைவன் ''உனக்கும் பெண்ணிற்கும் அவள் வித்திற்கும் உன் வித்திற்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையை காணப்படுத்தும் நீ அதன் குதிக்காலால் காயப்படுவாய்''(தொ.நூா.3:15) பாவம் வீழ்ந்து இயேசுவின் ஆட்சி உலகெங்கும் பரவ அன்றே இறைவன் செய்தி வெளியிட்டார். மாபரன் இயேசு மாட்டுத் தொழுவத்தில் சிறு குடிலில் மார்கழி மாதம் இருபத்தைந்தாம் திகதி அவதரித்தார். குழந்தை இயேசுவின் பிறப்பு விழாவை ஒளி விழாவாக உலகளாவிய ரீதியில் சாதி, மத, இன பேதமின்றி கொண்டாடுகிறார்கள். எங்கும் குடில் கட்டி மண்ணிற்குள் கடவுளைக் காணும் நாம் எம் மனங்களில் கடவுளை ஏற்க ஆயத்தமாக இருக்கிறோமா? மனச்சாட்சியின் கதவுகளைத் திறந்து மனவிருப்புடன் தீமையை விடுத்து நன்மையை தெரிந்து வாழ்கிறோமா? நாட்டில் சுதந்திரம் எதிர்பார்க்கும் நாம் எல்லோரும் சமம் என்னும் மனித மாண்பை மதித்து உரிய சுதந்திரத்தை எல்லோருக்கும் வழங்குகிறோமா? ''வார்த்தை மனுவுருவானார் நம்மிடையே குடி கொண்டார்'' (யோ 1:14) கிறிஸ்துவின் பிறப்பு கிறிஸ்மஸ் விழா வெறும் வரலாற்று நிகழ்வாக அமையாமல் எம்மை நாம் புதிய மாற்றுக் கலாச்சாரத்தினுள் மாற்றி எம் உள்ளங்களிலும் எம் இல்லங்களிலும் எமது நாட்டிலும் ஒளியாகிய குழந்தை இயேசுவின் பிரசன்னத்தை வரவேற்று நிற்போம். ஒரு ஒளி எப்படி பல்லாயிரம் ஒளியாக பிரகாசிக்கிறதோ அதேபோல் நாம் குழந்தை இயேசுவின் ஒளியைப் பெற்று ஒளியாக வாழ்ந்திட பெரும் குரல் எழுப்பி செபிப்போம். அப்போது நாட்டில் சமாதான ஒளி வீசும்.

கெலன் பெர்னாண்டோ, பாஷையூர்

# வன்னி மறைக்கோட்டத்தில் புனித டொன் பொஸ்கோ இளைஞர் ஒன்றியத்தின் கருத்தரங்கு

கடந்த 09.09.2001 அன்று குமிழமுனை புனித அந்தோனியார் ஆலயப் பங்கின் இளைஞர் ஒன்றியத்தினருக்கான கருத்தரங்கு பங்குத்தந்தை அருள்திரு ஞா. பீற்றர் அடிகளாரின் ஒழுங்குபடுத்தலின் கீழ் அருள்திரு விக்ரர் சோசை அவர்களினால் இளைஞர்களுக்கான கருத்தரங்கு நடாத்தப்பட்டது. ஆரம்ப நிகழ்வாக திருத்தந்தையின் கொடியும் புனித டொன் பொஸ்கோ இளைஞர் ஒன்றியத்தின் கொடியும் ஏற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து இளைஞர்களுக்கான விசேட திருப்பலி அருள்தந்தையர்கள் ஞா. பீற்றர், விக்ரர்சோசை அவர்களினால் ஒப்புக்கொடுக்கப்பட்டது. காலை 10.20 மணிக்கு அருள்திரு விக்ரர் சோசை அவர்களினால் ஆளுமை தொடர்பாக உரை நிகழ்த்தப் பட்டது. இதில் மனிதர் ஒவ்வொருவரும் இறைவனின் சாயலாகவும் பாவனையாகவும் படைக்கப்பட்டுள்ளோம். ஒவ்வொருவரும் தனித்துவமானவர்கள். யாருடனும் ஒப்பிட முடியாதவர்கள். பெறுமதியானவர்கள். வித்தியாசமான வேறுபட்ட பண்புகளையும் குணாதிசயங்களையும் உடையவர்களாக உள்ளோம். எமது ஆளுமை வளர்ச்சி யானது அக வளர்ச்சி, புறவளர்ச்சியின் வெளிப்பாடாக அமைந்துள்ளது. அக வளர்ச்சியானது உணர்வு, உறவு, தொடர்பு, பந்தம், பாசம் என்பவற்றை உள்ளடக்கியதாக உள்ளது. எமது உருவாக் கத்துக்கு நாமே பொறுப்பானவர்கள் எமது வாழ்வை ஆக்கப் பாதைக்கோ அல்லது அழிவுக்கோ இட்டுச் செல்வது எமது கரங்களில் உள்ளது. எங்களை உருவாக்கவும் வளர்த்தெடுக்கவும் எமக்கு உரிமையும் கடமையும் இருக்கின்றது. இளைஞர் உலகில் பெறுமதியான சொத்து. நாட்டின் முதுகெலும்பாகவும், கிறிஸ்துவின் தூதுவர்களாகவும் உள்ளனர். எமது வாழ்க்கை போராட்டம் நிறைந்ததாக உள்ளது. அதாவது உணர்வு ரீதியான போராட்டமா கவும் உறவு ரீதியான போராட்ட மாகவும் உள்ளது. எமது நாளாந்த வாழ்க்கைப் போராட்டத்தில் நாம் சந்திக்கும் சவால்களை மேற்கொண்டு கிறிஸ்தவ மதிப்பீடுகளை கட்டி எழுப்புதல் ஒவ்வொருவரின் கடமையுமாகும்.

நாம் நாளாந்தம் பல்வேறுபட்டவர்களுடன் பல வகைகளில் தொடர்புகளை மேற்கொள்கின்றோம். இத் தொடர்பானது மேலெழுந்த தொடர்பு, நடுநிலைத்தொடர்பு, ஆழமான தொடர்பாக உள்ளது. இவ்வகையில் மேற்கொள்ளப்படும் தொடர்பை உறவை சீர் குலைக்கும் காரணிகள் எவை என்பது பற்றி கருத்தரங்கில் பங்குகொண்ட இளைஞர் மத்தியில் ஆராயப்பட்டது. பொறாமை, சந்தேகம், அன்பற்ற தன்மை, சுயநலம், தப்பான அபிப்பிராயம், புரிந்துணர்வு இன்மை, நம்பிக்கை இன்மை, பிறர் சிநேகம் இன்மை ஆகிய காரணிகள் கண்டறியப்பட்டு இவை களையப்பட வேண்டும் என்று கூறப்பட்டது.

நாம் நாளாந்தம் பிரயோகிக்கும் வார்த்தைகளில் கவனமாய் இரு

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க திருமறைப்பாட சேவைக்கால கருத்தரங்கு பற்றிய அறிக்கை – 2001

கத்தோலிக்க திருமறைப் பாடம் தரம் 8,11களுக்கான சேவைக்கால கருத்தரங்கு யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் கத்தோலிக்க ஆசிரிய ஆலோசகர் திரு. பிலிப் தலைமையில் 02.11.2001 தொடக்கம் 03.11.2001 வரை தினமும் காலை 8.30 தொடக்கம் மாலை 4.30 மணிவரை இடம்பெற்றது. புதிய பாட கல்விச் சீர்திருத்தம் தொடர்பாக ஒழுங்கமைக்கப்பட்ட புதிய பாடவிதானங்களை மாணவர்களுக்கு எவ்வாறு கற்பிப்பது என்றும் கணிப்பீட்டு முறைகளை எவ்வாறு செயல் படுத்துவதென்றும் இக்கருத்தரங்கில் கலந்தாலோசிக்கப்பட்டமை ஓர் முக்கிய விடயம் இக் கருத்தரங்கின் நோக்கமாகவும் இருந்தது.

02.11.2001 அன்று வெள்ளிக்கிழமை முதல் நாள் நிகழ்வுகள் இறைவணக்கத்துடன் ஆரம்பமாகியதைத் தொடர்ந்து ஆசிரிய ஆலோசகர் வரவேற்புரை நிகழ்த்தினார். அவர் தமது உரையில் புதிய கல்விச் சீர்த்திருத்தத்திற்கு அமைய இக் கத்தோலிக்க பாடநெறியையும் நாம் ஒழுங்குற கற்பித்து சமுதாய ஒழுக்கத்தன்மையையும் மாணவர்களது ஆன்மீகத்தையும் வளர்க்க முன்னின்று உழைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இக் கருத்தரங்கு நிகழ்விற்கு ஆசியுரை வழங்கிய யாழ். மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனர் அருள்திரு R.X. நேசராஜா அவர்கள் தமது உரையில் இப் புதிய பாடத் திட்டம் ஆசிரியர்களைக் கூடுதலாகக் கற்க வைக்கின்றது. கற்று கற்பிக்க நிலைப் பாட்டில் ஆசிரியர் பல அனுபவங்களைப் பெற்று மாணவர்களுக்குப் போதிக்க வேண்டும் இதன் மூலம் மாணவர்களை ஓர் புதுவாழ்விற்கு இட்டுச்சென்று புதிய விழுமியங்களை மனித மாண்புகளைப் பேணுகின்ற கிறிஸ்தவ மதிப்பீடுகள் நிறைந்த சமுதாயத்தை உருவாக்கும் மாணவர்களாக அவர்கள் விளங்க ஆசிரியர்களின் வழிப்படுத்தலும் நெறிப்படுத்தலும் அடைவை எட்டுதலும் அமைய கத்தோலிக்க திருமறைப் பாடத்தை அதிக அக்கறையுடன் கற்பிப்பதில் முழு ஆர்வமும் அர்ப்பணிப்பும் கொண்டிருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

செல்வி வுளோறன்ஸ்

இதனை அடுத்து ஆசிரிய ஆலோசகரால் ''புதிய கல்விச் சீர்திருத்தம்'' பற்றிய விளக்கமும் கணிப்பீட்டு முறை பற்றிய விரிவான விளக்கமும் அளிக்கப்பட்டு ஆசிரியர்களின் ஐயப்பாடுகள் தெளிவுபடுத்தப்பட்டன.

அடுத்து அன்றைய பயிற்சிக் கருத்தரங்கின் முக்கிய செயற்பாடாக தரம் 8ற்கான கத்தோலிகக பாடநெறி கற்பித்தல் முறை பற்றிய பாடரீதியான விளக்கம் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் அருள்தந்தை பிலேந்திரன் அவர்களால் எடுத்துரைக்கப்பட்டது. இவர் தமது பாடஆய்வினை நான்கு ஆய்வுப் பொருள் ரீதியாக வகுத்து 1)எமது விசுவாசம் 2) விசுவாச வாழ்க்கைச் செயற்படுத்தல் 3) செப வாழ்வைச் செயற்படுத்துவதற்கு இறைஅருளைப் பெறுதல் 4) செபவாழ்வு என்னும் தலைப்புக்களில் குறிப்பிடப்படும் பாட அலகுகளைக் கொண்டு ஆழமான பூரண விளக்கத்தினை அளித்தமை ஆசிரியர்களுக்குப் பல ஐயப்பாடுகளை நீக்குவதாக அமைந்தது குறிப்பிடத்தக்கது. இவரது விளக்கம் மிகவும் பயனுடையதாகவும் அமைந்தது.

மீண்டும் ஆசிரிய ஆலோசகர் அவர்களால் வகுப்பறைக் கற்பித்தலுக்கு சிறப்பான முறையில் வழிவகுக்கக் கூடிய முறையில் பாடத்திட்டம் பாடநூல் ஆசிரிய கைநூல் என்பவற்றைக் கையாண்டு பாடக்குறிப்பு எழுதும் படிமுறைகள் பற்றிய விளக்கம் அளிக்கப்பட்டது.

அடுத்து யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளரால் சமய பாடநெறியில் ஆசிரியர்கள் மிகுந்த அக்கறை செலுத்த வேண்டும் என்னும் முறையில் உரை நிகழ்த்தப்பட்டது. அவர் தமது உரையில் சமய பாடநெறியானது மாணவர்களை உண்மைத் தன்மையைப் பின்பற்றச் செய்யும் அளவிற்கு மனமாற்றத்தை ஏற்படத்தக் கூடியதாக அமைய வேண்டும். கேளிக்கைகள் நவீன போக்குகளில் செல்கின்ற இன்றைய மாணவ சமூகத்தை ஒழுக்கமுறையில் வளர்த்தெடுக்கும் கல்வியாக சமயக் கல்வி மாற வேண்டும். அதற்கு ஆசிரிய சமூகமே முக்கிய பங்கு வகுக்க வேண்டும். குறிப்பாக கத்தோலிக்க மாணவர்களின் ஆன்மீகத் தன்மையை வளர்த்தெடுப்பதில் கத்தோலிக்க ஆசிரியர்களே அச்சாணியாக விளங்க வேண்டும் எனவும் எடுத்துரைத்தார்.

மதியவேளை இடைவேளையின் பின்னர் குழுச் செயற்பாட்டு நிகழ்வை யாழ். மறைக்கல்வி நிலைய மறைஆசிரியர் திருவாளர் S.F சவுந்தரம் அவர்கள் முன்னெடுத்தார்கள் குழுச் செயற்பாட்டு நிகழ்வில் தரம் 8ற்கு பாடக்குறிப்பு வரைதல் பற்றிய மூன்று தவணைக்குமான ஆயத்தக் கைநூல் மூன்று குழுக்களுக்கும் வழங்கப்பட்டு அக் கைநூலின் நன்மை தீமைகள் கலந்தாலோசிக்கப்பட்டு ஒவ்வொரு குழுவினரும் அறிக்கைகள் சமர்ப்பித்தனர். இந்நிகழ்வு முதல் நாள் நிகழ்வு மாலை 4.30 மணியுடன் நிறைவுற்றது.

இக் கருத்தரங்கின் இரண்டாம் நிகழ்வு 03.11.2001 அன்று காலை 8.30 மணியளவில் இறைவணக்கத்துடன் ஆரம்பமாகியது.

அன்றைய முதல் நிகழ்வாக ஆசிரிய ஆலோசகர் அவர்களால் பாடசாலை மட்டக் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகள், இணைப் பாடவிதான செயற்பாடுகள், மாணவர்களின் உடல், உள பண்பாட்டு வளர்ச்சி, குழு முயற்சி மூலம் தலைமைத்துவத்தை உருவாக்கல், கற்றல் அனுபவங்களை அர்த்தமுள்ள முறையில் செயற்படுத்தல் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டு விளக்கம் அளிக்கப்பட்டன.

அத்துடன் கத்தோலிக்க பாடத்துடன் இணைந்த பாடசாலை வேலைத்திட்டம் அமைக்கும் முறை பற்றியும் ஒப்படை செயற்பாடுகள், மதிப்பீட்டுக்கருவிகள், புள்ளி வழங்கும் திட்டம் என்பனவும் கலந்துரையாடப்பட்டன.

இதனைத் தொடர்ந்து அன்றைய செயற்பாட்டின் முக்கிய அம்சமாக விளங்கிய தரம்11 பாடத்திட்டத்திற்கான கலந்துரையாடல் நிகழ்வினை அருள்திரு ஜெகசேகரம் அவர்கள் மேற்கொண்டார். இக்கலந்துரையாடல் முறையானது பின்வரும் தலைப்புக்களில் முன்னெடுக்கப்பட்டது

- எனக்கும் நான் வாழும் சூழமைவிற்கும் இடையிலான ஆரோக்கியமான உறவு ஆன்மீகம்.
- சூழமைவின் யதார்த்தங்களுக்கு நேர்மையாகவும், பிரமாணிக்கமாகவும் இருக்க வேண்டும்.
- தற்போதைய சூழலில் யாழ் குடாநாட்டிலுள்ள வாய்ப்புக்கள் என்ன?
- இடப்பெயர்வுகள், வன்செயல்கள், பொருள் அழிவுகள், ஊடாக இறைவன் விடுக்கும் செய்தி என்ன?
- தமிழ்மொழி, பண்பாடு, இறைவன் கொடுத்த பெரும் தளம். எவ்விதமாக இதைப் பயன்படுத்தலாம்?

என்னும் தலைப்புக்களில் தமது கலந்துரையாடலையும் கருத்துரையையும் மேற்கொண்டிருந்தமை பயனுடையதாக விளங்கியது.

அடுத்து இடம்பெற்ற குழுக்கலந்துரையாடலில் பல்வேறுபட்ட கணிப்பீட்டுக் கருவிகளை எவ்வாறு பாடங்களுக்கு ஏற்ற முறையில் பயன்படுத்தி மாணவர்களைக் கணிப்பீடு செய்யலாம் என்பது பற்றிய குழுச் செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டு அலகு ரீதியாக வினாக்கள் தயாரிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து இடைவேளை மதிய போசனத்திற்காக விடப்பட்டது.

மீண்டும் இரண்டாம் நாளுக்குரிய குழுச் செயற்பாட்டினை மறை ஆசிரியர் திரு S.F சவுந்தரம் அவர்கள் மேற்கொண்டார் இந் நிகழ்வில் தரம்11 ற்கான பாடக்குறிப்பு கைநூலின் தன்மை பற்றிய பலாபலன்கள் மூன்று தவணைக்கும் மூன்று குழுக்களால் கலந்தாலோசிக்கப்பட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

அன்றைய இறுதி நிகழ்வாக ஆசிரிய ஆலோசகர் அவர்களால் ஆண்டு 11ற்கான மதிப்புரை, கணிப்பீட்டு முறைகள், புள்ளித்திட்டம் போன்றவற்றிற்கான பூரண விளக்கம் அளிக்கப்பட்டது. இறுதியாக இரண்டுநாள் கருத்தரங்கிலும் பங்குபற்றி சிறப்பான கற்பித்தலுக்கு ஒத்துழைப்பு நல்கிய ஆசிரியர்களுக்கு நன்றியும் தெரிவிக்கப்பட்டது அத்துடன் இக் கருத்தரங்கினைச் சிறப்பான முறையில் நடாத்தி ஆசிரியர்களின் முழுமையான கற்பித்தலுக்கு வழிவகுத்த ஆசிரிய ஆலோசகர்களுக்கும், விரிவுரையாளர்களுக்கும் ஆசிரியர்கள் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டு நன்றிப் பாடலுடன் நிகழ்வுகள் யாவும் இனிதே மாலை 4.30 மணியளவில் நிறைவெய்தின.

# யாழ். மாவட்ட மறைக்கல்வித் தேர்வு – 2001

13–10–2001 அன்று நடந்த யாழ். மறைமாவட்ட மறைக்கல்வித் தேர்வில் அதிகபுள்ளிகளையீட்டி முதல் மூன்று இடங்களை பெற்றுக்கொண்ட பாடசாலை மாணவர்களை வகுப்புவாரியாகத் தருகின்றோம். இவர்களுக்கு எமது பாராட்டுதலையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதோடு இம் மாணவர்களை நல்ல முறையில் மறையறிவில் வளர தயார் செய்த ஆசிரியர்களுக்கும் எமது பாராட்டுதலைத் தெரிவிக்கின்றோம்.

இப் பரீட்சை குறித்த நேரகாலத்தில் சிறப்புற நடைபெற ஒத்துழைத்த அனைத்து நல்ல உள்ளங்களையும் நன்றியுடன் பாராட்டுகின்றோம்.

குறிப்பாக பரீட்சையை நடத்துவதற்கு அனுமதி அளித்த வலயக் கல்விப் பணிப்பாளர்களையும், பரீட்சை வினாக்களைத் தயாரித்து உதவிய பாடசாலை ஆசிரியர்களையும், வினாத் தேர்வுக்கு காலநேரம் பாராது ஒத்துழைத்த பங்குத்தந்தையர்களையும், பாடசாலை ஆசிரியர்களையும், பரீட்சையில் ஊக்கமுடன் பங்குகொண்ட மாணவர் களையும், அனுசரணையாயிருந்த பெற்றோரையும் நன்றியுடன் நினைவுகூருகிறோம்.

மேலும் விடைத்தாள்களை மதிப்பீடு செய்ய உதவிய சகல ஆசிரியர்கள் மறை ஆசிரியர்களையும் குறிப்பாக பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆசிரிய, மாணவர்களையும் நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

| வகுப்பு | பாடசாலை | புள்ளிகள் |
|---|---|---|
| தரம் 5 | யாழ் / புனித ஜோண் பொஸ்கோ வித். | 95 |
| | யாழ் / ஊர். புனித மரியாள் மகளிர் வித். | 94 |
| | யாழ் / புனித ஜோண் பொஸ்கோ வித். | 94 |
| | யாழ் / இளவாலை கன்னியர் மடம் ம.வி | 93 |
| தரம் 6 | யாழ் / ஊர். புனித மரியாள் மகளிர் வித் | 95 |
| | யாழ் / வேம்படி மகளிர் உ.பெண்கள் வித். | 93 |
| | யாழ் / புனித பத்திரிசியார் கல்லூரி | 92 |
| தரம் 7 | யாழ் / ஊர். புனித மரியாள் மகளிர் வித். | 98 |
| | யா / மானிப்பாய் மெமோறியல் ஆங்கில வித். | 94 |
| | யாழ் / புனித பத்திரிசியார் கல்லூரி | 93 |
| | யா / தி.கு கன்னியர் மடம். பாடசாலை | 93 |
| தரம் 8 | பரு / புனித தோமையார் றோ.க.பெ. | 96 |
| | யா / இள. கென்றியரசர் கல்லூரி | 95 |
| | யா / பரு. புனித தோமையார் றோ.க.பெ. | 94 |
| | யா / அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியா. | 94 |
| தரம் 9 | யா / புனித அந்தோனியார் றோ.க.ம.வித். பாசையூர் | 94 |
| | யா / ஊர். புனித மரியாள் றோ.க.ம. | 92 |
| | யா / இள. கன்னியர் மடம் மகாவித்தி. | 91 |
| தரம் 10 | யா / இள. கன்னியர் மடம் மகாவித்தி. | 94 |
| | யா / வேம்படி மகளிர் உ.பெண்கள் பாட | 91 |
| | யா / புனித தோமையார் றோ.க.பெ. பருத்தித்துறை | 90 |
| தரம் 11 | யா / பரு. மெதடிஸ்த பெண்கள் கல்லூரி | 94 |
| | யா / தி.கு கன்னியர் மடம் பாடசாலை | 87 |
| | யா / புனித பத்திரிசியார் கல்லூரி | 86 |

இயக்குநர்
மறைக்கல்வி நடுநிலையம், யாழ்ப்பாணம்.

## என் மனக்கோவிலில் வா தேவா!

பிரமுகரின் வருகை என்றால் பிரமாண்ட வரவேற்பு
கரம் பற்றும் தம்பதிக்கோ செங்கம்பள வரவேற்பு
களம்வென்று மீண்டவர்க்கு பெரும் கரகோச வரவேற்பு
அன்பின் அரசரின் திருவருகையினை எவ்வாறு எதிர்கொள்வோம்?

மனைபெருக்கி வர்ணப்பூச்சிட்டு மலர்வளைவிட்டு
முனைவாசலிலே நிறைகுடமேற்றி மங்கலப் பொட்டிட்டு
புனைகவிபாடி தவிலிசையோடு ஆரத்தியல்ல வரவேற்பு
தனை ஆய்ந்து பெறும் மனமாற்றமே இறை எதிர்பார்ப்பு

உன்னக இருள் நீக்கி அன்பென்னும் ஒளியேற்று
தன்னையே மறுத்து அயலவர் நலன் நாடு
புன்மைகள் தவிர்த்து உள்ளத்தை தூயதாக்கி
விண்ணின்று மண்ணிறங்கும் மாபரனை கொலு ஏற்று

அடிமை நாம் உரிமைபெற இறைவாநீ வரவேண்டும்.
மிடிமையை விரட்டிட விரைவாய் நீவரவேண்டும்.
கொடுமையின் கொடிசாய்த்து கோலோச்ச வரவேண்டும்
மகிமையில் நாம் மகிழ மனக்கோவிலிலே வா தேவா!

எஸ். யேசுதாஸ்
கொழும்புத்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பாதுகாவலன் 125ஆவது

## பாதுகாவலன் தனது வரலாற்றில் எத்தனையோ கத்தோலிக்க மக்களின் எழுத்தாற்றலை, அறிவை வளர்த்திருக்கிறது

### அருள்ஊற்று ஆசிரியரின் ஆசிச் செய்தி

இலங்கை வாழ் கத்தோலிக்க மக்கள் விசுவாசத்தில் விழிப்புணர்ச்சியடைந்து, ஆன்மீக வழிநடக்கவும், கத்தோலிக்க மதத்தை வளர்ச்சிபெறச் செய்யவும் வேண்டுமென்ற நோக்குடன், இலங்கையில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட கத்தோலிக்க தமிழ் வார பத்திரிகையான பாதுகாவலன் திக்கெட்டும் மணம்பரப்பி, 125 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளமை குறித்து பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இப் புதிய நூற்றாண்டில் பல வண்ண அட்டைகளைத் தாங்கி வலம் வந்து கொண்டிருக்கும் பல பத்திரிகைகள், கவர்ச்சி என்ற போர்வையில் நம் இளைய தலைமுறையினரின் உள்ளங்களில் தவறான சிந்தனையைப் புகுத்தி ஒழுக்கத்தைச் சீர்குலைக்கும் வகையில் இளைஞர்களை வீட்டிற்கும், சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் பயன்படாதவர்களாய் ஆக்கிக் கொண்டிருக்கின்றன.

பொழுதுபோக்கிற்காக இத்தகைய மோசமான பத்திரிகைகளை படித்து கண்மூடித்தனமாக நடக்கும் மக்களை, குறிப்பாக இளைஞர்களைத் தீய சக்தியிலிருந்து பாதுகாத்து, கத்தோலிக்க மக்களின் விசுவாச வளர்ச்சிக்கு வழிகாட்டியாக விளங்கும் பாதுகாவலன் தன் பணியினை 125 ஆண்டுகளாக தொடர்ந்து மேற்கொள்ள பலவிதமான இன்னல்கள், இடையூறுகளை அனுபவித்திருக்கலாம். கடந்த 20 ஆண்டுகளாக நாட்டில் இடம்பெற்றுவரும் யுத்த நிலையிலும் தன் பணியை அயராது மேற்கொண்டு வருவது போற்றுதற்குரியது. மேலும் இப் பத்திரிகை தனது வரலாற்றில் எத்தனையோ கத்தோலிக்க மக்களின் எழுத்தாற்றலை, ஆர்வத்தை, அறிவை வளர்த்திருக்குமென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

இன்று எத்தனையோ பத்திரிகைகள் வெளிவருகின்றன. வந்தவேகத்தில் காணாமலும் போய்விடுகின்றன. ஆனால் பாதுகாவலன் பத்திரிகையுலகில் தனக்கென்று தனியிடத்தைப் பிடித்து நிலைத்து நிற்கின்றதென்றால் அதன் சிறப்பும், தரமும், முயற்சியும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

நாடெங்கிலும் வாசகர்களையும் படைப்பாளிகளையும் கொண்டிருக்கும் பாதுகாவலன் மென்மேலும் வாசகர், அபிமானிகள், படைப்பாளர்களின் பேராதரவைப் பெற்று, கத்தோலிக்க மக்களது விசுவாசத்தின் பாதுகாவலனாகச் சிறப்புடன் தன் பணியைத் தொடர இறைவனைப் பிரார்த்திப்பதுடன், எனது உளமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

நன்றி

கிறிஸ்துவில் அன்புடன்
அருள்திரு மில்ரோய் பொன்சேகா, ஆசிரியர்
அருள்ஊற்று

# நான் ஆடிய தொட்டில்

**புலவர் மணி - அமுது**
**லண்டன்**

பாதுகாவலன் நான் ஆடிய தொட்டில். அடியேன் எழுத்துத்துறையில் ஆனா எழுதியது, தொட்டிலில் கிடந்த தடுக்கில்தான். காவலனே என்னை வளர்த்த அன்னை. காலமெல்லாம் அவளுக்குக் கடமைப்பட்டவன். காவலனே என்னைத் தோளில் வைத்துச் சில்லுவண்டியில் நடைபயிலச் செய்து அறிவூட்டி, ஆதரவளித்துத் தண்ணளிமிக்க தந்தையாயிருந்தது. யான் பயிற்சிக் கலாசாலையால் வெளிப்பட்டு ஆசிரியராயிருந்த ஆரம்ப காலத்தில் ''எழுத்தாளருக்கு ஒரு தூது!'' என்றொரு கட்டுரையை எழுதினேன். பாதுகாவலனில் முதற்பக்கத்தில் அக் கட்டுரை வெளிவந்தது. அதைக்கண்டு ஆச்சரியத்தில் மிதந்தேன். வான மண்டலத்தில் சஞ்சரித்தேன். மரங்கள் தடிகள் எல்லாம் என்னைக் கண்டு தலை குனிந்தன. பலருக்கும் அதைக்காட்டிப் பெருமிதப்பட்டேன். அதை வாசித்த சுவாமி ஞானப்பிரகாசர், திருநெல்வேலியில் பத்துப் பதினைந்து ஆசிரியர்கள் மத்தியில் இளைஞனாகிய என்னைப் பாராட்டியபோது நான் அடைந்த ஆனந்தத்தை அளக்க ஒரு பாகைமானியும் இருக்கவில்லை.

நான் திருமணம் செய்தது. பிள்ளை பிறந்தது, பல்கலைக்கழகம் சென்றது, அங்கே ''இளங்கதிர்'' ஆசிரியராய் இருந்தது. நூல்கள் வெளியிட்டது, புலவர்மணி, தமிழ்க் கங்கை என்றெல்லாம் பட்டங் களைப் பெற்றது எல்லாவற்றுக்கும் முதல் வைத்த பொட்டு அந்தக் கட்டுரையே! என் வாழ்வின் திசையை அது திருப்பியது என்று சொல்லலாம். எனது முதற் கவிதையும் பாதுகாவலன் பண்ணையில்தான் முதல் மலராகப் பூத்தது. தமிழுலகில் சொற்கலைப் புலவர் என்றும் கத்தோலிக்க உலகில் பெரிய சுவாமி என்றும் பெயர் பெற்றிருந்த அறிஞரும், சிறந்த பேச்சாளரும், பன்மொழிப் பண்டிதரும், இரண்டாம் சாங்கோ பாங்க சுவாமியாருமாகிய நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் மறைந்த போது (1947) அடியேன் காவலனில் ''பூனை புலம்பல்'' என்ற தலையங்கத்தில் சில பாடல்களை எழுதியிருந்தேன். பூனையின் படம் ஒன்றையும் பக்கத் தில் போட்டு தடித்த எழுத்தில் எனது பாடல்கள் பிரசுரமாயின. அதைப் பார்த்து யான் பரவசமடைந்தேன்.

''பாலுஞ்சோறும் அள்ளித் தந்தவரே! – என்னைப்
பக்கத்தில் வைத்து வளர்த்தவரே!
மூலைக்குள்ளே நின்று கத்துகிறேன் – எந்தன்
முத்தமிழ் மன்னரே எங்குசென்றீர்!''

என்று புலம்பல் தொடங்குகின்றது. அந்தக் கவிதைகளையும் பலர் பாராட்டினார்கள். செவாலியர் அருளானந்தம் ஆசிரியர் ஒரு அற்புதமான கடிதம் எழுதி எனக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தார். அந் நாட்களில் யான் காவலூர் அந்தோனியார் கல்லூரியில் ஆசிரியராயிருந்தேன். திருநெல்வேலியில் சுவாமி ஞானப்பிரகாசரின் இடத்துக்கு நியமனமாயிருந்த பிலிப் அடிகளார், கல்லூரிக்கு வந்தார். என்னை அழைத்தார். அவரிடம் சென்றபோது ''மாஸ்ரர் அந்தப் பூனை சாப்பிடாமல் கிடந்து செத்துப்போனது'' என்றார். நான் திகைத்துப் போனேன். ஏனெனில் ஞானப்பிரகாசர் அன்பாக ஒரு பூனையை வளர்த்து வந்த செய்தியை நான் அறியேன். தொடர்ந்து பிலிப் சுவாமியார் ''நீங்கள் பாட்டுக்களை எழுதுவதாயிருந்தால் தரித்திரத்தையும் சுமக்க ஆயத்தமாயிருக்க வேண்டும்'' என்று சிரித்துக் கொண்டே சொன்னார். எப்படியிருந்தாலும் அவர் தமிழ்ப்பற்றில் ஆர்வமுடையவர்.

ஒரு புதுமுகத்தை அறிமுகப்படுத்தி அந்தத் திரைப்படம் ஓகோ என்று முன்னுக்கு வந்தால் அதன் இயக்குநர் எப்படி மகிழ்ச்சியடைவாரோ, முதற் பிரசவித்த குழந்தையைப் பார்த்து எப்படி ஒரு தாய் ஆனந்தமடைவாளோ அப்படியே எனது கட்டுரையும் கவிதையும் எனக்குப் பெரும் சந்தோஷத்தை அளித்தன.

யான் பல்வேறு இடங்களில் ஆசிரியராகப் பணியாற்றிய போதும் என்வாழ்க்கையில் காவலனே எனக்குக் கைத்துணையாயிற்று. நினைப்புக்கு எட்டிய காலம் முதல் பாதுகாவலனை நான் பெற்றுக்கொள்ளத் தவறவில்லை. இன்று லண்டனிலும் அதை வாசித்து வருகின்றேன்.

பாதுகாவலனில் தொடர்ந்து கட்டுரைகள், கவிதைகள் எழுதிவந்தேன். காவலனுக்கு எழுதிய எந்தக் கட்டுரையாவது பிரசுரமாகாமல் விட்டதில்லை.

இலங்கையில் வெளியாகும் ஏனைய பத்திரிகைகளுக்கும் எழுதிவந்தேன். எழுத்துத்துறையில் வாய்ப்புக்கள் மடியில் வந்து விழுவதில்லை. வாசிப்பும், சிந்தனையும், ஆற்றலும் முன்னுக்குத் தள்ளிவிடும். ''அமுது! என்ன 3, 4 கிழமையாக ஒன்றையும் காணவில்லையே!'' என்று காவலன் ஆசிரியர் என்னைக் காணும் வேளையில் கூறி என்னை ஊக்கப்படுத்தியதையும் நான் மறக்கவில்லை.

அக்காலத்தில் உதயதாரகை இந்துசாதனம், ஈழகேசரி என்று மூன்று பத்திரிகைகளும் வார இதழ்களாக வெளிவந்தன. உதயதாரகையே பத்திரிகை உலகில் மூத்த பத்திரிகை. சமயங்களுக்கிடையில் நல்லெண்ணமும் சகிப்புத் தன்மையும் மனிதநேயமும் இல்லாத அக்காலத்தில் இந்துசாதனமும் பாதுகாவலனும் [illegible] சத்தம் போடுவதுண்டு. அவற்றை ஆரவாரமாக நாங்கள் [illegible] திருப்பதும் நல்ல பொழுதுபோக்கு. எஸ். ஏ. குரூஸ் என்று எழுதுகிறவருடைய வசன நடையும் கருத்துக்களும் மிகவும் சுவையுள்ளவை. அவர்தான் ஆசீர்வாதம் சுவாமியார். நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அழகிய இலகுவான வசனநடையில் காவலனுக்கு அடிக்கடி எழுதுவார். பத்திரிகைத்துறையின் வளர்ச்சியைப் பற்றித் தினகரன் ஆசிரியர் சிவகுமாரன் எழுதிய நூலில் யாழ்ப்பாணப் பத்திரிகைகளாகிய பாதுகாவலன். இந்துசாதனம், உதயதாரகை, ஈழகேசரி என்பன பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளார். ஆதலின் அக்காலப் பத்திரிகைகளையிட்டு நான் இங்கு எழுத விரும்பவில்லை.

எனது காலப்பகுதியில் பல கவிதைகளை கவி மாமணி க.த. ஞானப்பிரகாசம் கவிஞர்கள் யுவன், ஜெயம் என்போர் எழுதியுள்ளனர். யான் ''மாதா அஞ்சலி'' என்று எழுதிய கவிதைகளை சந்தியோகுமையோர் ஆலயத்தைச் சேர்ந்த ஓர் தமிழபிமானி நூலாக அச்சிட்டார். அதுவே எனது முதற்கவிதை நூல். ஆயினும் அந்நாட்களில் கவிதைகள் இடம்பெறுவது மிகக் குறைவாகவேயிருந்ததெனலாம்.

சிறுகதைகளைத் தொகுத்து ஒரு நூலாக்கலாம் என்று கருதி யாழ். மேற்றிராசன சங்க இலக்கிய மன்றம் முயன்றது. ஆயினும் சிறந்த கதைகள் வந்து சேராமையால் முயற்சி கைகூடவில்லை.

சில வேளைகளில் நல்ல சிறுகதைகள் காவலனில் தோன்றின. ''நாலு நண்பர்கள்'' என்றொரு சிறுகதையை அடியேன் காவலனில் எழுதியிருந்தேன். நண்பர்கள் தங்கள் கதைகளைச் சொல்லும் பாணியில் தொடர்புபடுத்தி அக்கதை எழுதப்பெற்றது. அதைக் கண்ணுற்ற சுவாமி சவுந்தரநாயகம் அவர்கள் (இப்போது யாழ். ஆயர்) அதைப் பாராட்டி எனக்கு எழுதியது பசுமையாக என் நினைவில் இருக்கிறது.

50 ஆண்டுகளுக்கு மேல் பாதுகாவலன் ஆசிரியராய் இருந்தவர் அமரர் அ. ஞானப்பிரகாசம் என்பவர். சிறந்த பண்பாளர் இலக்கணம் சுத்தமாக எழுதுவார் நல்ல பக்திமான் நாளாந்தம் தூர இடங்களிலுள்ள கோயில்களுக்கும் சென்று திரும்புவார். அவருக்குத் துணை ஆசிரியர்கள் இருந்ததில்லை. தட்டச்சு இருக்கவில்லை. லிகிதர் இல்லை. தன்னந் தனியாகக் காவலனை நடாத்தினார். அவருடைய சேவையைப் பாராட்டி வெள்ளிவிழா ஒன்று நடாத்தப்பட்டது. அமைதியும், அடக்கமும் இறையன்பும் நிரம்பிய அப்பத்திரிகை ஆசிரியர் எனக்குப் பொன்னாடை போர்த்துப் பட்டமளித்ததை நினைத்தால் கண்ணில் நீர் சுரக்கின்றது. அவருக்குப் பின்னர் பேனா பிடித்தவர் அமரர் லூயிஸ் என்பவர். ஆங்கிலமும் தமிழும் கற்றவர். பத்திரிகை புதுச்சோபையுடன் வெளிவந்தது. பின்னர் காவலன் ஆசிரியர்களாகத் திருப்பணியாளர்களே பொறுப்பேற்றுக் கொண்டனர்.

125 ஆண்டுகாலம் ஒரு பத்திரிகை வெளிவருவது இலகுவான கருமம் அன்று. இந்த இலண்டன் நகரில் யான் வந்து 20 ஆண்டுகளில் எத்தனையோ பத்திரிகைகள் சிசுவிலேயே மரணமாயின. இரண்டொன்று நிலை நிற்கின்றன.

இப்போது காவலனில் புதிய கட்டுரைகள், புதுமையான செய்திகள் பலவேறு கவிதைகளைக் கண்டுகளிப்படைகின்றேன். சமய வளர்ச்சியும் பாராட்டத்தக்கது. பாதுகாவலன் (ஈழத் திருச்சபையின் குரலொலி அதன் குரல் மங்காமல் பல்லாண்டு கேட்க வேண்டும்.) வருங்காலத்தில் சிறந்த எழுத்தாளர்கள் – கவிஞர்கள் – ஆய்வாளர்கள் நம்மத்தியில் தோன்ற வேண்டும். அதற்குக் காவலனே களம் அமைத்துக் கொடுக்க வேண்டும். சத்தியத்தின் குடைபிடித்துக் காவலன் நீண்டகாலம் வாழுக என வாழ்த்துகின்றேன்.

# காவலனே வாழ்க வளர்க!

யாழ் மண்ணின் செய்திகளையும்
யோக உணர்வுகளும் கொண்டு
வாழ்வாங்கு வாழ நினைத்து
வடிவமைத்த பாதுகாவலனே
ஆழ் புரிந்து நிற்கும் திருச்சபையில்
அரியணை நாயகனாக
திகழ் வெளிச்சம் போல் மானிட
திசையெங்கும் ஓங்குக!

நூற்றிருபத்தைந் தாண்டுகள் ஓடி
நுகம் திரும்பாமல் நிற்கும்
நாற்றினைப் போல் வளையாது
நிகழ்ச்சிகளை தன்னகத்தே கொண்டு
காற்றலையென எழும் காவலனே
கிழமைதோறும் வருகவென
ஊற்றினை அள்ளி வழங்கியும்
உயர்வு கொண்டு வாழ்க!

சிலை போல் உண்மைகளை
சாதுரியமாய் உள்ளடக்கி
விலை பேசும் மனிதாபிமானத்தை
விசாரணை செய்யும் காவலனே
தலையாய இறைமகன் துணையுடன்
தரணியெங்கும் வலம் வருக
மலைபோல் உயர்ந்து மானிடரிடையே
வளமாக வாழ்க வளர்க வாழ்த்துக்கள்

ஆ. சான் பெனற்
திராட்சையூர் இளவாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# து ஆண்டு மலரிலிருந்து...




## வடபிரதேச மக்களின் யுத்தஅவலங்களை வெளிக்கொணரும் ஊடகமாக வளர்ச்சிபெற்றுள்ளது பாதுகாவலன்

### தினக்குரல் ஆசிரியரின் ஆசிச்செய்தி

ஆத்மீக விழிப்புணர்ச்சி, சமூக விழிப்புணர்ச்சி, கல்வி வளர்ச்சி ஆகிய பன்முகப்பட்ட நோக்கங்களை உள்ளீடாகக் கொண்டு யாழ்ப்பாண மண்ணில் இருந்து அருள் செழுமை யோடு வெளிவந்துகொண்டிருக்கும் பாதுகாவலன் தனது வாழ்வையும் வளத்தையும் மாற்றி நூற்றி இருபத்தைந்து ஆண்டுகளாகப் பேணித் தொடர்ந்தும் நிறைவோடு மலர்வது மன மகிழ்ச்சி தரும் விடயமாகும்.

பழமையும் பாரம்பரியமும் நிறைந்த பத்திரிகை புத்தாயிரம் ஆண்டின் எழுச்சிக்கு ஏற்ற வகையில் தன்னை நவீனத்துவத்திற்குட்படுத்தியும் புதுமையோடும் பொலிவோடும் வெளி வருவதை அவதானித்த இலங்கை பத்திரிகையாளர் சங்கம் 2000ஆம் ஆண்டுக்கான சிறந்த வடிவமைப்புக் கொண்ட பத்திரிகையாகக் கணித்து விருது வழங்கி கௌரவித்துள்ளது.

இலங்கையின் பாரம்பரிய பத்திரிகையான உதயதாரகையின் பின்னர் தோன்றிய உதயாதித்தன், உரைகல் ஆகியவற்றைத் தொடர்ந்து தோன்றிய கத்தோலிக்க பாதுகாவலன், இடைக்காலத்தில் சத்தியவேத பாதுகாவலன் என்ற பெயரோடு வெளிவந்தது. பல்வேறு வித பரிமாணங்களின் பின்னர் இப்பொழுது பாதுகாவலன் வாராந்தப் பத்திரிகையாக இப்பொழுது மாதம் இரு முறையாக வெளிவருகின்றது.

அச்சுக்கோர்க்கும் பாரம்பரியத்தோடு ஆரம்பித்த இந்தப் பத்திரிகை நவீன அச்சுப் பாரம்பரியத்தோடு சமய சமூக வரம்புகளைக் கடந்து வடபிரதேச யுத்தம், இடப்பெயர்வுகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் இனப்பிரச்சினை பற்றியும் மக்களின் அவலங்களை, அனுபவங்களையும் வெளிக்கொண்டுவரும் ஊடகமாக வளர்ச்சி பெற்றுள்ளது.

பழமை வாய்ந்த இந்தப் பத்திரிகை ஆசிரியர் அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை தனது சமயப் பணிகளின் பக்க வளர்ச்சியாக, தொடர்பியல் துறையில் ஆர்வம் கொண்டு, ''பழமையிலே புதுநினைவுகள் பாய்ந்து எழும்'' வகையில் ஆற்றிவரும் பணி மனநிறைவைத் தருகின்றது.

பாதுகாவலன் தமிழ் பேசும் நெஞ்சங்களின் பாதுகாவலனாக மேலும் நலம் சிறக்க வேண்டும் என வாழ்த்துவோமாக!

**ஆ. சிவநேசச் செல்வன்**
**பிரதம ஆசிரியர்**
**தினக்குரல்**

---

## பாதுகாவலன் ஆசிரியர்கள்

**C.C. கொலிந்திரன்**

இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் தமிழ்ப் பிரதேசங்களைப் பொறுத்தமட்டில் இற்றைக்கு 130 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் மொழி மூல கத்தோலிக்க பிரசுரங்களை புத்தகங்கள் அறிக்கைகளாக வழங்கும் பொதுசன ஊடக மத்தியஸ்தானமாக தென்இந்தியாவே விளங்கியது. இவற்றினூடாக கிறிஸ்தவர்களுக்கு ஞான அறிவும் சமூகக் கோட்பாடுகள், கட்டமைப்புக்கள் என்பனவும் போதிக்கப்பட்டு வந்தன.

இந்நிலையில் ஆயர் பொஞ்சினின் சிந்தனையில் சிறப்பானதொரு எண்ணம் கருக்கொண்டது. எமது பிரதேசத்தில் இப்பிரதேச மக்களின் தாய் மொழியிலான அச்சகம் நிறுவப்படவேண்டியதன் அவசியத்தை வெளிப்படுத்தினார். அவரது எண்ணத்தின் செயற்பாடே 1871இல் கொழும்புத்துறையில் திருப்பாலத்துவ கத்தோலிக்க அச்சகம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் அவ்அச்சகம் சஞ்சூசை மாமுனிவர் என்ற அச்சகம் என்ற பெயர் மாற்றம் செய்யப்பட்டு 1873இல் தற்போதைய அச்சக வளவுக்குள் கொண்டு வரப்பட்டது.

இந்தப் பதிப்பகம் கத்தோலிக்கத்துக்கு ஒரு தொடர்பணியை ஆற்ற விரும்பியது. அந்த ஆவல் 1876ம் ஆண்டு மாசிமாதம் 19ஆம் திகதி சனிக்கிழமை ''கத்தோலிக்க பாதுகாவலன்'' முதல் இதழ் யாழ். நகரில் வெளிவந்தபோது நிறைவேறியது. பின்பு ''யாழ்ப்பாண கத்தோலிக்க பாதுகாவலன்'', ''சத்தியவேத பாதுகாவலன்'' என்ற பெயர்களில் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது.

ஆரம்பத்தில் ஆங்கிலம், தமிழ், ஆகிய இரு மொழி பத்திரிகையாகவும், 1894ஆம் ஆண்டு முதல் ஆங்கிலம் தனியாகவும் தமிழ் வேறாகவும் பிரசுர மானது. 1912ஆம் ஆண்டில் சத்தியவேத பாதுகாவலன் வார இதழானது.

அச்சகக் கட்டிடம் ஆயர் கி. பொஞ்சின் O.M.I அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு ஆயர் K. யூலன் O.M.I அவர்களின் காலத்தில் முற்றுப்பெற்றது குறிப்பிடத்தக்கது. காவலன் தொடக்ககாலம் முதல் பல ஆங்கிலேய, இந்திய, சுதேச ஆசிரியர்கள் முகாமையாளராகவும் கடமையாற்றியமையை வரலாறுகள் எடுத்தியம்புகிறது.

**ஆங்கில இதழ் ஆசிரியர்கள்**

ஆங்கில வெளியீடான "Catholic Guardian" பத்திரிகையின் முதல் ஆசிரியராக அருள்தந்தை M.A. மேர்பி (Murphey) அவர்களும், உதவி ஆசிரியராக புனித பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர் திரு. ஜேம்ஸ் H. மார்ட்டீனும் பொறுப்பேற்று நடத்தினார்கள்.

தொடர்ந்து அருள்தந்தைகளான C. கொலின் (Collin), J.B. மியறி (Meary), P. டியூனி (Dunne), J. நெவிலி (Neville) ஆகியோர் கடமை புரிந்தார்கள். பின்னர் 1907ஆம் ஆண்டு வரை திரு ஜேம்ஸ் H. மார்ட்டீன் பிரதம ஆசிரியராகச் சிலகாலம் பணி புரிந்தார்.

புனித பத்திரிசியார் கல்லூரியின் புகழ்பூத்த இசை ஆசிரியரான திரு. A. சவரிமுத்து 1914 வரையும் மீண்டும் அருள்தந்தை T. கொலின் (Collin) 1917ஆம் ஆண்டு வரையும் அதனைத் தொடர்ந்து அருள்தந்தை K. செபஸ்தியன் அடிகளும் ஆங்கில ஏட்டின் ஆசிரியர்களாக விளங்கினர்.

**தமிழ்ப் பிரதியின் ஆசிரியர்கள்**

தமிழ்ப் பத்திரிகையின் முதல் ஆசிரியராக தமிழில் பாண்டித்தியம் பெற்ற அருளப்பா முதலியார் இந்தியாவிலிருந்து வந்து பொறுப்பேற்று சிறப்புற நடாத்தினார். இவ் இதழின் முன்னோடிகளாக திரு. முருகப்பா, திரு. பிலிப்பையா ஆகியோர் விளங்கினர். 1924ஆம் ஆண்டு தொடக்கம் தனது கண்பார்வையை இழக்கும் வரை திரு. ஏ. பிரான்சீஸ் தம்பு அவர்கள் ஆசிரியராக அரும்பணி ஆற்றினார். இக்காலத்தில் இவருக்கு பக்கபலமாக தெல்லிப்பளையைச் சேர்ந்த திரு. ஜோண் சங்கரப்பிள்ளையும் உதவி புரிந்துள்ளார். பின்னர் திரு. ஞானப்பிரகாசம் அவர்கள் இருபத்தைந்திற்கும் மேற்பட்ட ஆண்டுகளாக ஆசிரியப் பணியில் இணைந்து 1960இல் ஒய்வு பெற்றார். இவரது எழுத்துப்பணியைப்பாராட்டி For The Church And Pope (பாப்பரசருக்காகவும், திருச்சபைக்காகவும்) என்ற கௌரவ விருது வழங்கப்பட் டது குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து இளைப்பாறிய யாழ். ஆயர் வ. தீயோகுப்பிள்ளை ஆண்டகை அருள்தந்தையாக இருந்தபோது 1960இல் காவலனின் நிர்வாக ஆசிரியரானார். கல்லூரி அதிபராகவும், மறைக்கல்வி நூல்கள் தயாரிப்பாளராகவும் பல பொறுப்புக்களின் வேலைப் பளு காரணமாகத் தொடர்ந்து ஈடுபடுவது கடினமாக இருந்தது. எனவே 1962இல் S.M.J. லூயிஸ் அவர்கள் ஆயர் எமிலியானுஸ் அவர்களால் ஆசிரியராக நியமிக்கப் பட்டார். இவர் ஆயரின் அனுமதியுடன் ஆசிரியர் குழு ஒன்றை அமைத்து புதிய பல அம்சங்களை நடைமுறைப்படுத்தி பாதுகாவலனை மறுமலர்ச்சிப் பாதையில் 1972 வரை இட்டுச் சென்றார்.

**முகாமையாளர்கள் வரிசையில்**

ஆரம்பகாலம் தொட்டு முகாமையாளர்களாகக் கடமையாற்றிய அருள்தந்தையர்கள் சிறப்புற நிர்வகித்ததுடன் காவலனின் வளர்ச்சிப் பாதையிலும் முக்கிய கவனம் செலுத்தி வீறு நடை போட்டார்கள். இவர்களில் அமலமரித் தியாகிகள் சபைப் பங்கு அளப்பரியது. அந்த வரிசையில் அருள்தந்தை மொறோ (Fr. Mauroit) 1896ஆம் ஆண்டு அவர் இறைவனடி சேரும் வரை கடமைபுரிந்தார்.

அவரது இடத்தை நிரப்ப அருள்தந்தை அல்பிரட் டெல்பெச் (Fr. Alfred Delpech) நியமனம் பெற்றார். இவரைத் தொடர்ந்து அருள்தந்தையர் களான பௌலியன் (Fr. Poulain), (B) போ , மங்கா ஆகியோர் முகாமையாளர்களாக வழிநடத்தினர். பின்னர் வந்த அருள்தந்தை சியெர்ப்கா 12 ஆண்டுகள் பணிபுரிந்தார். இவரின் பதவிக் காலத்திலேயே இயந்திரங்கள் நவீன மயப்படுத்தப்பட்டன.

இவர்களுக்குப் பின் அருள்தந்தையர்களான யோண், சிங்கராஜா, ஸ்ரனிஸ்லோஸ், ஸ்கூமன் வேதநாயகம், பஸ்ரியன் ஆகியோரும் நிர்வகித்து வந்தார்கள். இடையிடையே ஏற்பட்ட தற்காலிக இடைவெளிகளை அருள்திரு பிறோகான், அருள்திரு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை (தற்போதைய திருமலை – மட்டுநகர் ஆயர் என்பவர்கள் நிரப்பியுள்ளனர்.

**ஆசிரியரே முகாமையாளர்**

இக்கால கட்டத்தின் பிற்பாடு பாதுகாவலனின் ஆசிரியர், முகாமையாளர் ஆகிய இரு பொறுப்புக் களையும் ஒருவரே கவனித்து வந்தார்கள். இறைபணியாளர்களான மேரி யோசப் (1972 – 1979), அன்ரன் மத்தாயஸ் (1979–1986 Oct.), அருமைநாயகம் (1986 – 1992 July), பிரான்சிஸ் யோசவ் (1992–1996 June), அன்ரன் மத்தாயஸ் (1996–1997 Oct.) போன்றோர்கள், தமது ஆற்றல்களாலும் புதிய உத்திகளாலும் பத்திரிகையைச் சிறப்புற வெளியிட்டு வந்தனர்.

1997ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை (2001–08–04) அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் இரு பொறுப்புக்களையும் ஏற்று வழிநடத்தி வருகிறார். இவரது காலத்தில் ஓவ்செற் முறையில் பாதுகாவலன் வெளிவந்ததும், சிறந்த வடிவமைப்புக்கான தேசியவிருது பெற்றமையும் பாராட்டுக்குரியதாகும். மேலும் நிருபர்கள் குழுவை அமைத்து மாதாந்த ஒன்றுகூடல் மூலம் கருத்துக்களைப் பரிமாறி பாதுகாவலனை புதிய பாதையில் நகர்த்திசெல்கிறார். பயிற்சி பட்டறைகள், ஒளிவிழா நிகழ்வுகள் என்பனவும் சிறப்புற நடைபெற்று வருகின்றன. இவ்வாறு பல்வேறு சவால்கள், தடைகளுக்கு முகங்கொடுத்து அன்றுதொட்டு இன்றுவரை 125ஆண்டுகள் பாதுகாவலன் மெருகூட்டி வளர்த்துவந்த ஆசிரியர்கள் முகாமையாளர்கள் அனைவருக்கும் கத்தோலிக்கர்கள் என்றும் நன்றிக்கடப்பாடு உடையவர்கள் என்பதில் இருவேறு கருத்து இருக்க முடியாது

## பூமியில் எங்கும் பொங்கி நிற்கும்

பூமியில் எங்கும் பொங்கி நிற்கும்
புண்ணியப் பூவே! போற்றி! போற்றி!

மாமறை வாழும் மாதவக் கொழுந்தே!
பேர்புகழ் ஏந்தாப் பெரும்பணி நீயே!

திக்குகள் எங்கும் தேடித் திரிந்து
பக்தியை வளர்த்த பெருமையும் உனக்கே!

ஐயம் தீர்க்கும் அற்புதச் சுடரே!
வையம் போற்றும் வளர்மதி நீயே!

கடமை செய்து கண்ணியம் காத்து
மடமை நீக்கும் மருத்துவம் ஆனாய்

நித்திய வீட்டை நேரிலே காட்டும்
சத்திய வேந்தன்! சாட்சியாய் நின்றாய்

பிறர்நலம் பேணவும் இறைபுகழ் பாடவும்
உறவுகள் பகிரவும் உழைத்தாய் எங்கும்

நற்செய்தி வாக்கு நாடெங்கும் பரப்ப
அர்ப்பணம் செய்த ஆசான் நீயே!

அகதிகள் வாசலில் அடிமைகள் காவலில்
சுகபலம் அறிந்து சேதிகள் கூறும்

அழகுமறைத் தொண்டின் ஆற்றல் நீயே!
உளம்குளிர வைக்கும் உத்தமன் நீயே!

ஆனந்த யூபிலியின் அன்பருளை ஏந்தி
பூவுலகப் பூங்காவில் பூரித்து நிற்கும்

தெய்வீக இதழே! தேவனின் புகழே!
உய்திடும் வழிகளில் நல்லிதய வாழ்த்து.

**ஞா. அரியமலர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "காவோலை விழக் குருத்தோலை சிரிப்பதா?"

### இளமையிலே.......

- பத்து மாதம் சுமந்து பாலூட்டித் தாலாட்டிச் சீராட்டி உன்னை வளர்த்தேனே.........
- கட்டிலிலே மெத்தையிட்டு என் கண்னே நீ உறங்கு எனத் தாலாட்டுப்பாடி உன்னை உறங்க வைத்தேனே.........
- பட்டுச் சட்டையை பகட்டாக நான் உடுத்தி உன் தலையில் பூச்சூடி என் கண்மணி நீயென உன்னழகை ரசித்தேனே..........
- உருசியான உணவுகளை உந்தனுக்கு அளித்து நானும் நீ உண்ணும் போதினிலே பூரிப்பு அடைவேனே.........
- உன் பிறந்த நாளை ஊரெல்லாம் பறைசாற்றி என் பிள்ளை மகிழ்வு கண்டு உச்சி குளிர்ந்திடுமே.........
- பட்டப் படிப்புக்களில் நீதேறி முன்னேற இரவு பகலாக தெய்வத்தை நாடினேனே...............
- உழைத்து உழைத்து நான் என் உடலை ஓடாக்கிக் களைத்துக் களைத்து உன் வாழ்வைச் சிறப்பிக்க...........
- மக்கள் அவையிலே உன் புகழ் கொடி பறக்க என் உடல் உளம் உவகையால் நிறைந்ததே.........
- உன் வாழ்வை வளமாக்க என் உடல் பொருள் ஆவி அனைத்தையும் அளித்தேனே........
- ''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வமென'' நாங்கள் நம்புகின்றோம்...........

### முதுமையிலே.......?

- ஆகப் பத்தே பத்து நாட்கள்தானே பாயில் படுக்கையிலே கிடந்தேனே; என்னை கடைக்கண் நோக்காதது ஏனோ?
- வீட்டுக் கொல்லைப் புறத்திலே கந்தல் பாயில் என்னைக் கிடத்தி நான் அலறும் வேளையிலே ''வாயை மூடி உறங்கு'' என்பது ஏனோ?
- பொத்தல் ஆடையுடன் கந்தல் துணியுடுத்து, தலை வார யாருமின்றி, அலங்கோல உருவமாக என்னை நீ விட்டுவிட்டது ஏனோ?
- ''என்ன உணவெனக்கு'' என்று நான் கேட்டு விட்டால் ''பேசாமல் இரு'' என்று பொல்லொன்று நீண்டிடுமே ஏனோ?
- பாரிசவாதமாய் உன் அன்னை படுத்திருக்க ஊரார்க்கு ''இது எதற்கு'' எனப் பேசாமல் இருந்திடுவாய் இது ஏனோ?
- பட்டம் பெற்றவுடன் பெற்றெடுத்த எம்மையெல்லாம் தேவையே இல்லையெனச் சட்டம் பேசிடுவாய் இது ஏனோ?
- அனைத்தும் பெற்று நீ ''சென்று வாமகனே; வென்று வா'' என இறுதியில் அனுப்பி வைத்தாய் அனாதை மடமொன்றில் இது ஏனோ?
- தந்தை யாரென உனை அங்கு வினவவே ''எனக்கில்லை தந்தை'' என உரைத்தாய் பொய்யொன்றை என் முதுமை நிலை கண்டு?
- நாளாந்தம் நீ சோக்கும் சொத்துக்கள் பணங்கள் எல்லாம் உன் பெற்றோர் மடிந்தபின் ஊரார் பார்த்திருக்க பாசாங்கான நிகழ்வுகள் நடத்தவா?
- ''அன்னையும் பிதாவும் பின்னடிக்கிடைஞ்சல்'' என்றதை ஏற்பதும் சரிதானோ?

## வேதாகமத்திலிருந்து இறைவார்த்தைகள் சில...

***சீராக் ஆகமம் அதி* :3:3/4/6/8/9/11/12/13/16**

- தந்தையரை மதிப்போர் பாவங்களிற்கு கழுவாய் தேடிக் கொள்கின்றனர்.
- அன்னையரை மேன்மைப்படுத்துவோர் செல்வம் திரட்டி வைத்திருப்போருக்கு ஒப்பாவர்.
- தந்தையரை மேன்மைப்படுத்துவோர் நீடு வாழ்வர் ஆண்டவர்க்கு பணிந்து நடப்போர் அன்னையர்க்கு மதிப்பளிப்பர்
- சொல்லாலும் செயலாலும் உங்கள் பெற்றோரை மதியுங்கள். அப்பொழுது உங்களுக்கு ஆண்டவரின் ஆசி கிடைக்கும்.
- தந்தையின் ஆசி பிள்ளைகளின் குடும்பங்களை நிலை நாட்டும் தாயின் சாபம் அவற்றை வேரோடு பெயர்த்து எரித்துவிடும்
- தந்தை மதிக்கப் பெற்றால் அது பிள்ளைகளிற்குப் பெருமை; தாய்க்கு இழிவு ஏற்பட்டால் அது பிள்ளைகளுக்கு சிறுமை
- குழந்தாய் உன் தந்தையின் முதமையில் அவருக்கு உதவு, அவரது வாழ்நாளெல்லாம் அவரது உள்ளத்தைப் புண்படுத்தாதே
- அவரது அறிவாற்றல் குறைந்தாலும் பொறுமையைக் கடைப்பிடி, நீ இளமை மிடுக்கில் இருப்பதால் அவரை இகழாதே.
- தந்தையரைக் கைவிடுவோர் கடவுளைப் பழிப்பது போலாகும் அன்னையர்க்கு சினம் ஊட்டுவோர் ஆண்டவரால் சபிக்கப்படுவர்.
- உன் தந்தையையும் தாயையும் மதித்து நட *(எபேசியர் 6:2)*

**தவம் குருசுமுத்து, நவாலி.**

# பானையில் இருந்தால்தான்... (உள்ளத்தின் நிறைவில் நின்றே வாய் பேசும்)

அருள்திரு அன்ரனிபாலா

சென்ற இதழ் தொடர்ச்சி...

## 3.2 திருஇசைக்குப் பொருத்தமான இசைக்கருவி பயன்பாடு

அநேகமான பாடல்கள் கர்நாடக இசையிலும் ஒருசில பாடல்கள் கர்நாடக இசை தழுவிய மெல்லிசையிலும் வெளிவந்துகொண்டிருப்பது பற்றி ஏற்கனவே நாம் அறிந்தோம். இந்தப் பக்தியின் இசை மரபிற்குரிய இசைக்கருவிகளையே திருஇசைக் குழுவினர் பயன்படுத்த வேண்டும். வயலின், ஆர்மோனியம், மிருதங்கம், வீணை, புல்லாங்குழல், கடம் போன்றவற்றோடு சுருதிக்காக சுருதிப் பெட்டி அல்லது தம்பூரா பாவிப்பது நல்லது. மேற்கத்தேச இசைவல்லுநர்களால் கண்டுபிடிக்கப்பட்ட வயலின் என்னும் இசைக்கருவி கர்நாடக இசைமரபுடன் இன்றியமையாத முறையில் ஒன்றித்துவிட்டதனால் அது தவிர்க்கப்படமுடியாதது. தபேலா இசைக்கருவி கர்நாடக இசை மரபைச் சார்ந்ததல்ல. ஆயினும் பஜனை வழிபாட்டிற்கு இக்கருவி பாவிக்கப்படலாம். கர்நாடக இசைக்கு வீணை மற்றும் இரட்டை இதழ் (Doble reed) ஆர்மோனியம் புல்லாங்குழல் மிகவும் பொருத்தமானவை. ''டோலக்'' என்னும் இசைக்கருவியும் ஒற்றை இதழ் (Single reed) ஆர்மோனியமும், இனிமை, பொருத்தப்பாடு குறைவாகையால் தவிர்க்கப்படுவது நல்லது. மின் இணைப்பு ஓர்கன், கிற்றார் போன்ற இசைக்கருவிகள் மேற்கத்தேச இசையில் மட்டும் அமைந்த ஒருசில பாடல்களுக்குப் பாவிக்கப்படலாம். கர்நாடக இசைப்பாடல்களுடன் இவற்றை இணைப்பதாயின் அதனை மேற்கொள்ளும் இசைக்கலைஞர்கள் இரு இசை மரபுகளிலும் (கீழைத்தேச, மேலைத்தேச) மிகுந்த ஞானமுடையவராக இருத்தல் வேண்டும். நாம் தற்காலத்தில் ஆலயங்களில் பாடுகின்ற கர்நாடக இசையின் வஜ்ர, வக்ர, உபாங்க, பாஷாங்க, ஷாடவ, ஔடவ இராகங்களில் அமைந்த அநேகமான திருஇசைப் பாடல்களுக்கு மேற்கத்தேச இணைச்சுரங்களை, கர்நாடக இசைஞானமில்லாதோர் இணைத்து இசை வழங்கினால் பல அபஸ்வரங்கள் ஒலிப்பதைக் காணலாம். எடுத்துக்காட்டாக, கம்சத்வனி, சிவரஞ்சனி, மோகனம் போன்ற இராகங்களில் அமைந்த பாடல்களுக்கு ஆரோகணத்திலும் அவரோகணத்திலும் ஒருசில ஸ்வரங்கள் தவிர்க்கப்படுவதும்; சாமா, பிலகரி மோகன கல்யாணி, காபி போன்ற இராகங்களில் அமைந்த பாடல்களுக்கு ஆரோகணத்தில் விலக்கப்படும் ஸ்வரங்கள் சில அவரோகணத்தில் சேர்க்கப்படுவதும் மேலும் இவை போன்ற பல இராக நியதிகள் (இராக லட்சணங்கள்) கர்நாடக இசைமரபில் உண்டு. எனவே மேலைத்தேச இணைச்சுரங்கள் (Chords) சேர்ப்பதாயின் மிகவும் கவனமாக அவை இணைக்கப்படாவிடில் பிழையான இசைக்கலப்பு ஏற்படும். இவ்வாறான ''திருஇசை'' ஞானமற்றோரின் ஏனோ தானோ என்ற இசைக்கலப்பினால் இன்று யாழ். மறைமாவட்டத்தில் உள்ள ஒருசில ஆலயங்களில் இசைக்கப்படும் பாடல்கள் திருவழிபாட்டைக் குழப்பும் அவலநிலையையும் காண்கின்றோம். ஒருசில் இடங்களில் சாதி வேறுபாடு காரணமாக திருஇசைப் பயிற்சியாளர்களையும் திருஇசைக் கருவி மீட்டுபவர்களையும் (மிகவும் திறமைமிக்கவர்களை அருகாமையிலே வைத்துக்கொண்டு), தூர இருந்து மிகவும் சிரமப்பட்டு அவர் களது திறமைகளை ஆராய்ந்து பாராது அழைக்கின்ற கிறிஸ்தவத்திற்கு ஒவ்வாத தன்மையையும் காண்கின்றோம். இந்தவகையில் இளையோர் சமூகம் பரந்துபட்ட கிறிஸ்தவ மனப்பான்மையுடன் செயற்பட விளைந்தாலும் அவர்களுக்குத் தடையாக இருக்கும் பெரியோரின் மனநிலை மாறுவது மிகவும் அவசியம். பெரியோரின் இந்த நச்சு விதைகள் இளையோர் மத்தியிலும் தூவப்படுவது பல இடங்களில் இன்றும் அவ தானிக்க முடிகிறது.

## 4. கடந்தகாலத் திறமைகள் இன்றும் போற்றப்படுகின்றன

கடந்த இரண்டு அல்லது மூன்று தசாப்தங்களாகப் பாடப்பட்டு வந்த திருவழிபாட்டுப் பாடல்களும் அவற்றைப் பாடிய திருஇசைக் குழுவினரின் திறமைகளும் அவற்றை நெறிப்படுத்தியோரின் திறமைகளும் பாராட்டப்பட வேண்டும். அன்றுமுதல் பாடப்பட்டு வந்த பல பாடல்கள் இன்றும் எமது இறைமக்கள் பலராலும் பாராட்டப்படுகின்றன. *எடுத்துக்காட்டாக:–* மலரெனமனதினை *(கல்யாணி)* யாரது வருபவள் *(காபி)*, அடியோர் யாம் தரும் *(வலஜி)*, எல்லாம் தருகின்றேன் [illegible] இறைவா பேசும் *(கல்யாணி)*, சுந்தரஜோதி *(ஆனந்த பைரவி)* நித்திய சாந்தி *(அமிர்தவர்ஷனி)*, உன் திருயாழில் *(சிந்துபைரவி)*, உறவை வளர்க்கும் *(தேஷ்)* மங்களம் பாடியே *(மத்யமாவதி)*, எழுந்திடும் நினைவில் எல்லாம் *(சிவரஞ்சனி)*, தியாகத் தருவே *(சிவரஞ்சனி)* வரம் கேட்டு *(சுநோத விநோதினி)*, எனக்கொரு நண்பன் உண்டு *(தர்பாரி கானடா)*, தவறாயிரம் நான் *(முகாரி)*, எல்லாம் நீயே *(ஆரபி)*, ஆயிரம் நன்றி சொல்வேன் *(கம்பீர நாட்டை)*, ஒரு கோடிப் பாடல்கள் *(சிவரஞ்சனி)*, இதோ உமது அடிமை *(தோடி)* போன்ற பாடல்களைக் கூறலாம்.

மேலே குறிப்பிட்ட பாடல்கள் இந்தியாவில் இருந்து வரத்தொடங்கிய காலங்களில் எம் மத்தியில் சிறந்த இசையமைப்பாளர்கள் இருந்தார்கள் என்பதை நாம் மறந்துவிட முடியாது. சிறப்பாக 1958ம் ஆண்டு யாழ்ப்பாணம் அடைக்கலநாயகி ஆலயத்தின் ஆர்மோனிய இசைக்கலைஞர் (Organist) திருவாளர் யோசவ் அன்றூா அவர்களால், (அவருக்கு முன்பே 1939ம் ஆண்டு வெளியிடப்பட்டிருந்த நவீன கீர்த்தனா சங்கீரணம் என்னும் புத்தகத்திற்கு இணையாக) வெளியிடப்பட்ட அடைக்கலநாயகி கீர்த்தனா சங்கீரணம் என்னும் புத்தகத்தில் இருந்து மதுரமான யேசுவே, ஸ்பிரீத்து சாந்துவே வாரும், சீவபலியான நேச, எமை முழுவதும், யேசு நேசிக்கிறார், கெட்டுப்போனோம், அன்புருவாய், வந்தோம் உன் மைந்தர் கூடி, மாதாவே துணை நீரே, தாயே உன் பாதம், வாழ்த்துவோம், ஏற்பீர் அம்மா தாயே, அம்மா அம்மா ஆதரி, ஓ அன்னையே, பாவாலும் மனப்பூவாலும் என்னும் பல இனிமையான பாடல்கள் எமது இசையமைப்பாளர்களால் அன்று வெளியிடப்பட்டு இன்று வரை நிலைத்து நிற்பதை அறிகின்றோம். இன்றும் எமது இறைமக்களால் வாயாரப் புகழ்ந்து பாடப்படும் மருதமடு மாதாவே, பாத்திமா நாயகியே, மருதமடுத்தாயே, மாமடு வாழும், அடைக்கலத் தாயே, அடைக்கலமே அடைக்கலமே தாயே (சாமா) போன்ற பாடல்கள் 1948ம் ஆண்டு மருதமடு அன்னையினதும், 1950ம் ஆண்டு போர்த்துக்கல் பத்திமா அன்னையினதும் சொரூபங்கள் யாழ். மண்ணில் பவனியாகக் கொண்டுவரப்பட்டபோது திரு யோசவ் அன்றூா அவர்களால் இயற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். எனவே பழைய பாடல்கள் என திருஇசைக் குழுவினர் எதையும் தள்ளிவிடாது அனைத்துப் பாடல்களையும் தேவையின்படி தேர்வு செய்து, பாடி வழிபாட்டைச் சிறப்பித்தல் வேண்டும். தற்காலப் பாடல்களிலும் பார்க்க பழைய பாடல்கள் சிறப்பாக அமைந்ததற்கு இனிமையான சுவையான இராகங்களில் அமைந்தது மாத்திரமல்ல செய்யுள் யாப்பு விதிகளுக்கு ஏற்ப மறைக் கருத்தாழத்துடன் அமைக்கப்பட்டதும் ஒரு காரணமாகும். ''எழுத்தசை சீர்தளை அடிதொடையாறும், செய்யுள் உறுப்பென செப்பினர் புலவர்'' என்னும் யாப்பதிகார சூத்திரத்திற்க மைய ஆறு உறுப்புக்களமைந்து, கற்பனை வளம் நிறைந்து எதுகை மோனையுடன், இறை உணர்வுடன் திரு இசைப் பாடல்கள் எழுதப்படின் அவை சிறப்படையும் என்பதில் ஐயமில்லை.

## 5. திருவழிபாட்டில் சங்கீதங்கள் (திருப்பாடல்கள்)

இஸ்ராயேல் மக்களின் உன்னத செபம் சங்கீதங்கள் பயன்படுத்துவது அவசியம். சங்கீதம் திருவழிபாட்டின் ஒருபகுதி. முதல் வாசகத்தைத் தொடர்ந்து திருப்பலியில் சங்கீதம் ஒன்றில் வாசிக்கப்படவேண்டும் அல்லது பாடப்படவேண்டும். சங்கீதத்திற்குப் பதிலாகப் பொருத்தமல்லாத பாடல்களைப் பாடி இறைமக்களின் செப சூழலைத் திசைதிருப்புவதை திருஇசைக்குழுவினர் தவிர்க்க வேண்டும். தனது பலவருட திருஇசைப் பங்களிப்பில் பல்வேறு திறமைகளுடன் சிறந்துவிளங்கிய அருட்தந்தை அதிரியான் யோசேப் அ.ம.தி அவர்கள் எளிமையான இசையுடன் சங்கீதங்களை வெளியிட்டுள்ளார். இப்பணியைத் தொடர்ந்து செய்து திருவழிபாட்டு மூன்று ஆண்டு காலங்களுக்குமுரிய சங்கீதங்கள் முழுவதையும் இசையமைத்து வெளியிட்டுள்ளார், மறைப்போதகர் இசைத்தென்றல் திரு.ம. யேசுதாசன் அவர்கள். இவர்களது சேவையைப் பாராட்டுகின்ற அதேவேளையில் இவர்கள் போன்று இசை நுட்பங்களைக் கற்றுத் தேர்ந்து திருஇசையை வளர்ப்பதற்குப் பலர் முன்வரவேண்டும். இந்தவகையில் எமது இளம் தலைமுறையினருக்கு கர்நாடக இசைப்பயிற்சி வழங்கிவரும் திருமறைக்கலாமன்றத்தினையும் திரு இசைக்குழு அங்கத்தவர்களுக்கு மறையறிவு, இசையறிவுப் பயிற்சி வழங்கிவரும் திருவழிபாட்டு நிலையத்தினையும் நான் பாராட்டுகின்றேன்.

*(தொடர்ச்சி அடுத்த இதழில்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்களும் அமதி ஆகலாம்



இளையோரே!

அழைத்தல் விதையை
அன்பின் ஆண்டவர்
உங்கள் உள்ளத்திலும்
விதைத்திருக்கலாம்

- பிரான்சியப் புரட்சி தந்த கனி
- 68 நாடுகளில் பரந்த பணி
- "எளியோர்க்கு நற்செய்தி" என்ற தொனி
- 153 வருடம் இலங்கைத் திருச்சபையின் அணி

இன்னும்......

மறையுரை, மகாஞான ஒடுக்கம், பங்கு, அனாதைச் சிறுவர் பராமரிப்பு, இடம்பெயர் சேவை, சமூகத் தொடர்பு, உளநலச் சேவை, ஆன்மீகப் பணி எனப் பல பணிக்களங்கள்

அழைப்பின் குரல் உங்களிடம்
பணிக்களங்கள் எங்களிடம்

ஆகவே வாரீர்....
அமலமரித்தியாகிகளோடு
இணைந்திடுவீர்

உங்கள் தொடர்புகளுக்கு:

அதிபர்
புனிதவளனார் குருமடம்
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்.

இயக்குனர்
தேவ அழைத்தல்
புனி. வனத்து சின்னப்பர் ஆலயம்
அப்புத்தளை

இயக்குனர்
தேவ அழைத்தல்
அமல அன்னை அன்பகம்
முழங்காவில், கிளிநொச்சி

# சமாதானம் என்னிடமிருந்து வரவேண்டும்

சமாதானத்தை தரவேண்டும் என்று அரசிடம் எதிர்பார்க்கும் நாம் எம்மில் எம்மத்தியில் சமாதானம் உண்டா? என எப்போதாவது நினைத்துள்ளோமா

யாரிடமும் இருந்து எதிர் பார்ப்பது கோழைத்தனம். நான் எப்படி வாழ்கின்றேன் என்றுஎன்னுடைய வாழ்க்கையை ஆராய்ந்து திருந்தி நடக்க முயலவேண்டும். எனது போக்கு மற்றவர்களுக்கு நன்மையானதாக இருக்குமா? என ஒவ்வொரு கணமும் சிந்தித்தே செயல்பட வேண்டும்.

நான், எதை, என்னுடையது என சுயநலப் போக்கில் வாழ்கின்றேனா? ஏழை – பணக்காரன், உயர்ந்தவன் – தாழ்ந்தவன், சாதி, மதம் என்பவற்றில் பாகுபாடு காட்டுகின்றேனா? ஆம்! உண்மை அப்படியான எனக்கு எப்படி சமாதானம் கிடைக்கும் எனக்குள்ளே, எனது அயலாரிடம் அன்பு காட்டாத நான் எவ்வாறு சமாதானத்தை விரும்புவேன். எவ்வாறு அதை எதிர் பார்ப்பேன். எனக்குள்ளே போருக்கான ஆயுதங்கள் எல்லாம் இருக்கின்றனவே அதை மூடி மறைத்து போலித்தனமாய் வாழ விரும்புகின்றேனே இது நியாயமா? போர் என்றால் தனித்து இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடக்கும் சண்டை மட்டுமல்ல, அவற்றிற்கு உடந்தைகளாக நாமும் வாழ்கின்றோம்.

நாம் மாறவேண்டும் எமக்குள் உள்ள தீய எண்ணங்கள் பழிக்குப் பழிவாங்கும் தன்மைகளை போக்க வேண்டும். சமாதானம் மலர வேண்டுமானால் எம் ஒவ்வொருவரின் ஒத்துழைப்பும் வேண்டும். நாம் மனம் மாறுவோம். சமாதானம் தானாகவே மலரும்.

*ம.கசில்டா*
*நல்லூர்*

## வன்னி மறைக்கோட்ட...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

க்க வேண்டும். எமது சாதாரண வார்த்தை எத்தனையோ பேரின் வாழ்வை அழிப்பதற்குக் காரணமாய் அமையலாம். எதையும் தாங்கும் மனப்பான்மையை எம்மிடத்தில் உருவாக்க வேண்டும். சரியான மதிப்பீடுகளுடன் செயல்படும்போது எமது நாளாந்த உறவையும் தொடர்பையும் மேம்படுத்தலாம். தனி ஆள் ஒருவரின் பண்புகளை நிர்ணயிப்பதில் பெற்றோர், நண்பர்கள், வாழ்க்கைச் சம்பவங்கள், மத நிறுவனங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன. இவற்றின் ஊடாகவே வாழ்க்கை மதிப்பீடுகளையும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது. தொடர்ந்து இளைஞர்களிடம் சுய மதிப்பீடு தொடர்பான வினாக்கள் கொடுக்கப்பட்டு அதற்கான விடைகள் எழுதப்பட்டன. பின்னர் மனித மனங்களில் எழும் உணர்ச்சிகள் எழுதப்பட்டிருந்தன. இவற்றை ஒவ்வொரு பயிற்சியாளர்களும் தமக்கு விருப்பமான முறையில் பட்டியற்படுத்தி எழுதினர்.

மனிதனின் அகத்தை நான்கு வகையாகப் பிரிக்கலாம். திறந்த பகுதி, இருண்ட பகுதி, மூடிய பகுதி, மறைந்த பகுதியாகும். இதற்கான விளக்கங்கள் அளிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து பல்வேறு வகைப்பட்ட விளையாட்டுக்கள் குழுக்கள் ரீதியில் நடைபெற்றன. இவ் விளையாட்டுக்கள் ஆனது விவேகம், நுண் அறிவு, நிதானம், அவதானம், பொறுப்புணர்ச்சி, ஒத்திசைவு போன்ற பல்வேறுபட்ட பண்புகளை உள்ளடக்கியதாக அமைந்தது. இளைஞர்களுக்கான கருத்தரங்கானது, இளைஞர் மத்தியில் விழிப்புணர்வையும் சுயமதிப்பீட்டையும் உருவாக்கும் ஒன்றாக அமைந்தது. தொடர்ந்து கருத்தரங்கு தொடர்பான மதிப்பீடு இடம் பெற்றது. இவ் அரிய வாய்ப்பை ஏற்படுத்தித்தந்த பங்குத்தந்தை ஞா. பீற்றர் அடிகளாருக்கும் கருத்தரங்கை நெறிப்படுத்திய அருள்திரு விக்ரர் சோசை அவர்கட்கும், எமது இளைஞர் ஒன்றியத்தினர் தமது நன்றிகளைத் தெரிவித்து நின்றனர். இறுதி நிகழ்வாக திருத்தந்தையின் கொடி பங்குத்தந்தையினாலும், ஒன்றியக் கொடி ஒன்றியத் தலைவரினாலும் இறக்கப்பட்டன. எமது ஒன்றியத்தின் பாதுகாவலராம் புனித டொன் பொஸ்கோவின் கீத இசையுடன் மாலை 7.00 மணிக்கு நிகழ்வுகள் இனிதே நிறைவுற்றது.

*நன்றி*

*தகவல்*
*செல்வி. நீ. றோஸ்மலா.*

# மீட்பின் சுவடுகள் – 6

## அருளப்பர் பிறந்தார்

### சூரியநிலா

நாட்களும் சிலவே ஓடிவிட
நங்கை எலிசபெத் அம்மாளும்
எழில் நிறை மேனி அழகுடைய
எழுந்து நில் வீரத் தோளுடைய
பார்வையிலே பரிவும் பண்பும் குடியிருக்கும்
குழந்தை ஒன்றைப் பிரசவித்தாள்

குழந்தைக்கு ஏது பெயர்
குறிப்பதென கூடியிருந்தோர்
கூடியலசிக் கொண்டு
முந்தையோர் பெயரை
முனைப்புடன் வைப்பதா?
புதியதோர் பெயரை
புனைந்து அளிப்பதா?
என்று பலரும் எடுத்தாராய
எலிசபெத் உடனே
'அருளப்பன்' என்றாள்!

தாயே உம் செயல்
தகுதியாகுமோ?
என்றே பலரும் எடுத்துக்கூற
தன்னவன் சக்கரியாஸினை அழைத்து
என்ன பெயர் வைக்கலாம்
என்று வினவினாள் எலிசபெத்தும்!

சக்கரியாசும்
சைகையில் பேசியே
எழுதுகோலொன்றை எடுத்துவாவென்றார்
எழுதியே பெயரினை
ஏற்றமுடன் காட்டிட
அங்குமே 'அருளப்பன்'
என்று பெயரது
ஆகியே இருந்தது!

எல்லோரும் வியந்தனர்
எங்கனமிது வென
சிந்தையில் அலசினர்
'அருளப்பன்' எனப் பெயர்
அருளிய இறைவனின்
அற்புத செயலது
அங்கன்று தெரிந்தது!

தூய ஆவியின் துணையது பெற்று
தூங்கிக் கிடந்த பேச்சது வென்று
மூங்கையும் அகன்று
முழுவதாய் பேசி
கடவுளை வாழ்த்தி
கவிபல பாடினார் சக்கரியாசும்!

இஸ்ராயேலின் இறைவனே
போற்றி! போற்றி!
இடர்படும் மக்களின்
இதமாய் ஆனீர்
தாவீதின் குலத்தில்
மீட்புத் தங்க
உமதருள் தந்தீர்
உத்தமரே நன்றி!

பகையில் நின்றும்
பழிச் சொற்களில் நின்றும்
காத்து எம்மை நடத்திவந்தார்
ஆபிரகாமினால் உடன்படிக்கை
அழகாய் எமக்கு தந்தார்
அருள் நிறைந்த வாக்குகளை
அகிலத்திற்கு அனுப்பிவைத்தார்
என்றுமே ஆண்டவனின்
எழிலழகை நீயுரைப்பாய்

இருள் வாழ்வில் ஒளியாகி
கதிரோனில் ஒளிபோல
கதிர்ந்தொளிந்து
அருள்கூரும் இறைவனவன்
அன்பினிலே நம்பிக்கையை
வைத்து வாழ்வோம்
மாறாத உண்மையிது
மனதினிலே கொள்வோமிதை
என்பல கவிகள் செய்து
ஏற்றமுடன் போற்றினாரே
சக்கரியாஸ் சாந்தியுடன்!

இயற்கையுடன் இசைந்து வாழும்
அருளப்பனின் வாழ்க்கையது
காடு மலை கரடு முரடு கைகோர்த்து
வெட்டுக் கிளிகள் உணவாகி
வெறுந்தேனால் தாகம் தீர்த்து
வாலிபனாய் வளர்ந்து வந்தார்!

'இறைவனவன் தூதுவன்
இவனே என்றும்
ஆண்டவனின் வரவினையே
ஆயத்தப் படுத்துகவென்றும்
பாலை வனத்தினிலே
பால் வார்க்கும் குரலொன்று
கேட்கும்' என்று
[illegible]
உரைத்த உண்மை
இவ்வாறு நிறைவேறவே
இவையெல்லாம் நிகழ்ந்ததுகாண்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

திருக்குடும்பத்தின் பேராலும் புனித அந்தோனியார் பரிசுத்த யேசுவின் இருதயத்திடமும் நான் கேட்டுக்கொண்டபடி என் உடைந்த கால், உடைந்த கை, பரிபூரண சுகமாயின் நான் ஓர் வயதானவன், இருப்பினும் மேற் குறிப்பிட்டவர்களின் அற்புதச் செயலால் சுகமடைந்துள்ளேன். நான் நேர்ந்த நேர்த்தியின்படி புதினப் பத்திரிகையின் மூலமாகப் பிரசுரிக்கின்றேன்.

இப்படிக்கு
யேசுவின் ஓர் பக்தன்

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
1929 – 12 – 24



விண்ணில்
2000 – 11 – 24

### திருமதி பிறிஜிற்றம்மா நிக்கொலஸ்

(கரவெட்டி)

அமைதியின் திருவுருவாய்
பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்த
எங்கள் அன்புத் தெய்வமே
ஓராண்டு ஓடி மறைந்தாலும்
நெஞ்சைவிட்டு உம் நினைவு
என்றுமே மாறாது மறையாது

இவவின் ஆன்ம இளைப்பாற்றிக்காக கல்கிசை புனித அந்தோனியார் ஆலயத்தில் 24.11.2001 சனிக்கிழமை காலை 6.45 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இல.8 ஸ்ரேசன் றோட்,
வெள்ளவத்தை.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

## டிசம்பர் 14ஆம் திகதி உலக நோன்பு தினம்

பாப்பரசரின் பிரதிநிதி கொழும்பிலிருந்து இலங்கை மக்களுக்கான திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பரின் விசேட அழைப்பு ஒன்றினை அவசரமாக விடுத்துள்ளார்.

டிசம்பர் 14ஆம் திகதி முஸ்லிம் சகோதரர்கள் ரம்ழான் நோன்பு தினத்தை நிறைவு செய்யும் வேளையில் அவர்களோடு சேர்ந்து வன்செயல் கலாச்சாரம் உலகம் முழுவதிலும் நிறுத்தப்பட வேண்டும் என்று நோன்பிருக்கும்படி உலக மக்கள் அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

யாழ். ஆயர் அவர்கள் அன்றைய தினத்தை சிறப்பான நோன்பு செப தினமாக அனுசரிக்கும்படியும் நற்கருணை எழுந்தேற்றம் செய்து பங்குகளிலும் துறவியர் இல்லங்களிலும் செபிக்கும்படியும் அழைப்பு விடுத்துள்ளார்.

## எமது எதிர்காலத்தை மனதில் கொண்டு வாக்களியுங்கள்

**கொழும்பு பேராயர் மேதகு நிக்கலஸ் மார்க்கஸ் பெர்ணான்டோ ஆண்டகை**

எதிர்வரும் தேர்தலில் எமது அரசியல்வாதிகளுக்கு இது அவர்கள் நாடு மட்டுமல்ல இது நமது நாடு என்பதை தெரியப்படுத்துவோம். இதுவே மக்கள் சக்தியாகும்.

தேர்தல் காலத்தில் வன்முறையைத் தூண்டும் தலைவர்களுக்கு வாக்களிக்காதிருப்போம்.

எமக்கு அமைதியையும் சமாதானத்தையும் தரக்கூடிய தலைவர்களையே தெரிவுசெய்வோம். எமது எதிர்காலத்தை மனதில் கொண்டு தெளிந்த மனதோடு வாக்களிப்போம் என அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

# உரோமை ஆசிய ஆயர் பேரவையில் பங்கேற்கும் திருச்சபையின் தலைமைத்துவம் 3 விதங்களில் ஆயரால் செயற்படுத்தப்படுகிறது

உரோமாபுரியில் 2001 செப்டெம்பர் 30ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட ஆயர் பேரவையின் பொதுக் கூட்டத்தில் ஆசிய ஆயர் சபையின் செயலாளர் நாயகம் – அனுராதபுர ஆயர் ஒஸ்வால்ட் கோமிஸ் அவர்கள் ஆற்றிய உரையின் தொகுப்பு.

"திருச்சபையின் புதிய வழியாவது பங்கேற்கும் திருச்சபையாக விளங்குவது. அதில் பாரிசுத்த ஆவி பொதுநிலையினர், குருக்கள், துறவியர் ஆகியோருக்கு வழங்கும் எல்லாக் கொடைகளுமே அங்கீகரிக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன" என 1990இல் நடந்த ஆசிய ஆயர் பேரவையின் கூட்டத்தில் கூறப்பட்டது.

சமூகங்களின் ஐக்கியத்தில் தலைமைத்துவம் சமூகத்தினரிடையே பகிரப்படுகின்றது. தொடர்ந்து அது சமுதாயத்தைக் கட்டியெழுப்பச் சிறப்புறச் செய்கின்றது. இத் தலைமைத்துவம் மற்றவர்களைத் தலைவர்களாக உருவாக்குகின்றது. தலைமைத்துவம் என்பது சமுதாயத்துக்கு சேவை செய்யும் ஒரு பணியாகும்.

பங்கேற்கும் திருச்சபையில் கூட்டுப் பொறுப்பைக் கட்டியெழுப்ப ஆயர் தம் தலைமைத்துவத்தை பயன்படுத்துமாறு அழைக்கப்படுகிறார். பங்கேற்கும் திருச்சபை என்பது பணிக்கு வெறுமனே துணைவரை வைத்திருப்பது அல்ல, பொறுப்புள்ள உடன் உழைப்பாளரை வைத்திருப்பதாகும். தாமும் திருச்சபையின் பணியில் கூட்டுப் பொறுப்புள்ளவர்கள் என அவர்கள் உணரும்படி செய்ய வேண்டும்.

பங்கேற்கும் திருச்சபையின் தலைமைத்துவம் மூன்று விதங்களில் ஆயரால் செயற்படுத்தப்படுகிறது.

1) மக்களுக்கு ஒரு நோக்கைக் காட்டுவது.

2) உரிமை அளிப்பதற்கான ஒரு பண்பாட்டு நிலையை உருவாக்கல்.

3) பங்கேற்பை அனுமதிக்கக் கூடியதாக அமைப்புக்களை மாற்றியமைத்தல்.

இந் நோக்கானது மக்களுக்கு எல்லா மேய்ப்புப் பணித் திட்டங்கள் பற்றியும் ஒரு பார்வையைக் கொடுக்கின்றது.

உரிமை அளிப்பதற்கான ஒரு பண்பாட்டு நிலையை உருவாக்குவதென்றால், தம்மில் நம்பிக்கை வைக்கப்படுகிறதென்றும், தமது ஆலோசனைகளை வழங்குவதன் மூலம் பங்கேற்கவும் பிறருடைய வார்த்தைக்குச் செவிமடுத்து, எடுக்கப்பட்ட தீர்மானங்களில் அவர்களோடு ஒன்றுசேர்ந்து உழைக்கவும் ஊக்கமளிக்கப்படுகின்றது என்பதை மக்கள் உணரும்படி செய்தல் வேண்டும்.

அமைப்புகளை மாற்றியமைப்பதென்பது மக்கள் அனைவரும் தீர்மானங்களை எடுப்பதில் பங்கேற்று குழுக்களாக வேலை செய்வதாகும். எந்த இடத்தில் மக்கள் பிரதிநிதிகளின் ஈடுபாடு உள்ளதோ அங்கு சமூகங்களின் ஐக்கியம் உள்ளதைக் காணலாம்.

எமது இரண்டாவது கருத்து திருப்பணியாளர்களுக்கான அழைத்தலை ஊக்குவித்தல். ஓர் ஆயர் ஒரு மறை மாவட்டத்துக்காக மட்டுமல்ல. முழுத் திருச்சபைக்காகவே திருநிலைப்படுத்தப்படுகிறார் என வத்திக்கான் சங்கம் கூறுகிறது. ஓர் ஆயர் தனது மறைமாவட்டத்தின் தேவைகளுக்கு மட்டுமல்ல, திருச்சபையின் பிற பகுதிகளின் தேவைகளுக்கும் பொறுப்பாக இருக்கிறார் என்பதே இதன் பொருளாகும். இது முதலில் தமது ஆயர் பேரவை இருக்கும் பிரதேசத்துக்கும், அடுத்ததாக தமது கண்டத்துக்குட்பட்ட பிர தேசத்துக்கும் பின்னர் முழு உலகிற்கும் உள்ள தேவைகளைக் குறிக்கும்.

எனது அடுத்த கருத்து என்னவெனில் திருச்சபையானது விசுவாசத்தில் மட்டுமல்ல, மனித உருவாக்கத்தின் எல்லா அம்சங்களிலும் அறிவூட்டும் ஒரு காரணியாக இருக்க வேண்டும் என்பதே. உலக காரியங்களில் சமயச் சார்பின்மை அதிகரித்து வருவதால், உலகியற் கல்வித் துறையிலிருந்து திருச்சபை விலக்கப்பட்டுள்ளது. கல்வித் துறையிலும், சமூகத் தொடர்புகள், தொடர்பு சாதனங்கள் ஆகியவற்றில் சமய, அறநெறிப் பரிமாணங்களைப் பேணுவதற்கும் ஆயரின் தலைமைத்துவம் இன்றியமையாதது. போதகர் என்ற முறையில் இது ஆயரது பணியின் ஒரு பாகம் என நான் நம்புகிறேன்.

## தேர்தல் வன்முறை...

(1ஆம் பக்க தொடர்ச்சி)

கொள்ளும் அனைத்து கட்சிகளையும் வேட்பாளர்களையும் ஆதரவாளர்களையும் ஜனநாயக விழுமியங்களுக்கொப்ப செயற்படுமாறும், வாக்கு மோசடிகளில் ஈடுபடுதல், வாக்காளர்களை விலை கொடுத்து வாங்குதல், பலவந்தமாக வாக்களிக்கச் செய்தல், ஆயுத முனைகளில் பயமுறுத்துதல் போன்ற கீழ்த்தரமான செயல்களில் ஈடுபட்டு தமிழர்களாகிய எம்மில் எஞ்சியிருக்கும் வாக்களிக்கும் உரிமையையும் இழந்துவிட வழி சமைக்காமல் இருக்குமாறும் மிகவும் கரிசனையோடு கேட்டுக்கொள்கிறோம்.

மக்களும் தமது சுய நன்மைகளை தியாகம் செய்து அனைவரையும் அமைதியின் பாதையில் வழிநடத்திச் செல்லுவோரை இனங்கண்டு அவர்களுக்கே தங்கள் வாக்குகளை இட்டு எமது நாட்டையும் மக்களையும் மேலும் அழிவிலிருந்து காப்பாற்ற இத்தேர்தலை பயன்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறோம்

**கிறிஸ்மஸ் மடல்கள் விற்பனைக்கு**

கிறிஸ்மஸ் வான்கடிதங்கள், கார்ட்டுக்கள், வழமை போல புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் விற்பனைக்கு உண்டு.

# அமலமரித் தியாகிகள் சமூக சேவைப் பணியக நிதியுதவியில் தும்பளையில் ஆரம்ப முன்பள்ளி



அமல மரித்தியாகிகள் சமூகசேவைப் பணியக ஆதரவில் 26.10.2001 தும்பளையில் ஆரம்பிக்கப்பட்ட முன்பள்ளி திறப்பு விழாவில் அதன் இயக்குனர் எஸ். ஸ்ரனிஸ்லாஸ் அடிகள் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் சிவதிரு பா. இலட்சுமணன் ஐயர், அருள்திரு செ. றோய் போர்டினன் ஆகியோர் நிற்பதையும் காணலாம்.

அமலமரித் தியாகிகள் சமூகசேவை பணியக ஆதரவில் தும்பளை இட்சுமணன் தோட்ட ஆரம்ப முன்பள்ளி அறிவகம் கட்டடத் திறப்பு விழா 26-10-2001 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெற்றது.

மதத் துறவிகளும் கல்வி மேம்பாட்டாளர்களும் அரச அலுவலர்களும் ஒருங்கிணைந்து மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர்.

அமலமரித்தியாகிகள் சமூக சேவை பணியக இயக்குனர் அருட்தந்தை எஸ். ஸ்ரனிஸ் லோஸ் அவர்கள் ஆற்றிய உரையில் யாழ் மக்கள் தற்போதைய கல்வியில் பின் தங்கிய நிலையை இட்டு தனது ஆதங்கத்தையும் தம் கவலையையும் தெரிவித்தார். ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கு நிலையான, உரமான அத்திவாரமாய் அமைய வேண்டும் என்றும் மேற்படிப்புகளுக்கு ஆரம்பக் கல்வி அவசியம் ஆகையால் பெற்றோர்கள் தமது சிறார்களிடம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

திட்டமிடல் இயக்குனர் நா. மகேந்திரன் பேசுகையில் யாழ் மக்களின் வரலாறு காணாத கல்வி பின்தங்கிய நிலையில் இருப்பதாகவும் இந்த நிலையை விருத்தி செய்ய ஆசிரியர்கள் மட்டுமல்ல பெற்றோரும் ஊர் மக்களும் சேர்ந்து உழைக்க வேண்டும். இதுவே நமது இனத்திற்கு நாம் செய்யும் தலையான கடமை நல்ல அமைதியான சூழலில் ஆரம்பிக்கப்பட்ட இந்த அறிவகம் மாணவர்கள் கல்வி கற்பதற்கு ஏற்ற சூழலை உடையது என்பதையும் அவர் குறிப்பிட்டார்.

இறுதியில் ஆரம்ப முன்பள்ளியின் முதல் நாள் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. இவ்வகுப்புக்கள் சிவத்திரு. பா. இலட்சுமணன் ஐயர் மேற்பார்வையில் நடைபெற்று வருகிறது.

# போரினால் தெற்கில் நாம் அனுபவிக்கும் துன்பங்களைக் காட்டிலும் வடக்கில் நீங்கள் அதிக துன்பத்தை அனுபவிக்கிறீர்கள்

## தெற்கில் போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் சங்கத்தினர்

தெற்கில் போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் சங்கத்தினர் யாழ். மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குனர் சி.ஜீ. ஜெயக்குமார் அடிகளின் ஏற்பாட்டில் யாழ். நகர் வந்து இங்கு போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் சங்கத்தினரை சந்தித்தனர். அச்சந்திப்பின்போது வெளிவந்த கருத்துக்கள் இவை.

1. போரினால் தெற்கில் நாம் பல உயிர்களை இழந்துள்ளோம் வடக்கில் நீங்களும் பல உயிர்களை இழந்துள்ளீர்கள்.

2. எமது இழப்பைக் காட்டிலும் உங்கள் இழப்பு மோசமானது. உயிர்ப் பயத்தினால் அனைத்தையும் அவசர அவசரமாகவே செய்ய வேண்டியிருக்கிறது.

3. நாம் இருவரும் ஒன்று சேர்ந்து இப் பிரச்சினைக்கு ஒரு முடிவினைக் காண வேண்டும்.

4. கொழும்பில் நாம் பெற்ற 90 ஆயிரம் கையொப்பங்களுடன் யாழ். நகரில் நாம் பெற்ற 5ஆயிரம் கையொப்பங்களையும் இணைத்து தேர்தலில் வெற்றி பெறும் கட்சியினை எம் பிரச்சினைக்கு தீர்வு தரும்படி நெருக்குதல் செய்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org